# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.



| மாலை 2 | ஞாயிறு 23-4-39 பிரமாதிஞு சித்திரைமீ 10உ | முத்து 4 |
|---|---|---|



## பொருள் அடக்கம்

—



| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. ராஜ்கோட் யுத்தம் | ... | 98 |
| 2. குறிப்பு | ... | 100 |
| 3. தென்றல் காற்று | ... | 102 |
| 4. வார நடப்பு | ... | 104 |
| 5. மேகம் (ஸ்ரீ. கு. பா. வேங்கடாசலம்) | ... | 105 |
| 6. கிராமவாசியின் தேவை (அரயபுரம் ஸ்ரீ. வி. வேங்கடாராமய்யர் எம்.ஏ., பி.எல்.) | ... | 106 |
| 7. பாலைவனத்திலோர் அபயம் (ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ.) | ... | 108 |
| 8. கிராம சேவை (ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்) | ... | 109 |
| 9. அன்பின் வெள்ளம் ("வஸந்தன்") | ... | 112 |
| 10. அம்மா! (ஸ்ரீ. பே. கோ. சுந்தரராஜன்) | ... | 116 |
| 11. சிறுவர் பகுதி (ஸ்ரீமதி சேது அம்மாள்) | ... | 121 |
| 12. ஸோவியத்தில் பத்திரிகை நிலைமை (ராழ) | ... | 123 |
| 13. ரேடியோவும் சினிமாவும் ('சிரேஷ்டன்') | ... | 124 |
| 14. கல்வியின் லக்ஷியம் | ... | 126 |
| 15. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் | ... | 127 |



—

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# ராஜ்கோட் யுத்தம்

மகாத்மா காந்தி, பெடரல் நீதிபதியின் தீர்ப்புப்படி, ஏழு பேர்களை சீர்திருத்தக் கமிட்டிக்குச் சிபார்சு செய்தார். அப்படிச் செய்யுமுன் முஸ்லீம்களையும் கிரஸியர்களையும் திருப்தி செய்ய பிரும்மப் பிரயத்தனம் செய்தார். அந்த சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதிகளை கமிட்டியில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கிளர்ச்சியும் நடந்தது.

மகாத்மா காந்தி தாகூர் சாகிபைப் பார்த்து "ஐயா! கமிட்டியின் எண்ணிக்கையை அதிகப் படுத்துங்கள். இந்த சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் அளியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். அவர் சம்மதிக்கவில்லை.

தாகூர் சாஹிப் பிடிவாதம் செய்கிறார். சிறுபான்மையாரோ கூச்சல் போடுகிறார்கள். என்ன செய்யலாம்? மறுபடியும் காந்திஜி "சரி! உங்களுக்குப் பிரிதிநிதித்துவம் கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் பரிஷாத் பிரதிநிதிகளுடன் ஒத்துழைக்க வேண்டும். அப்படிச்செய்யச் சம்மதமா?" என்று சிறுபான்மையோரைக் கேட்டார். "அது முடியாது" என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? சிறுபான்மையோர் தாகூர் சாகிபுடன் சண்டைபோட்டு பிரதிநிதித்துவம் கேட்கமாட்டார்கள். அதுவும் தாகூருக்கு அப்படிச் செய்ய அதிகாரம் இருக்கும்போது. ஏன் தாகூர் சாகிப் பிரிதிநிதித்துவம் கொடுக்கமாட்டேன் என்கிறார்? சிறுபான்மையோர் ஏன் அவரைக் கேட்கமாட்டேன் என்று காந்திஜியை ஹிம்சைப் படுத்துகிறார்கள்? இங்கேதான் இருக்கிறது விஷயமெல்லாம்.

இருக்கட்டும்; காந்திஜி அவர்களுக்கு நியமனம் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் அவர் கேட்பதெல்லாம் அவர்கள் பரிஷாத் பிரதிநிதிகளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றுதான். சிறுபான்மையோர் ஏன் மறுக்கிறார்கள்? இங்கேதான் இருக்கிறது சூக்ஷமம்.

அதாவது, பரிஷாத் மெஜாரடியைக் குலைக்க நடக்கிறது சூட்சி. இந்த சூட்சியை தாகூர் சாகேப் சிறுபான்மை சமூகத் தலைவர்களைக் கையில் போட்டுக்கொண்டு நடத்துகிறார் என்று வதந்தி இருக்கிறது. தாகூர் சாஹேபின் பூர்வ சரிதையையும் அவர் மந்திரி வீரவாலாவின் நடத்தையும் அறிந்திருப்பவர்கள் அதைக் கேட்டு ஆச்சர்யப்படமாட்டார்கள்.

மகாத்மா தன் உயிரையே தியாகம் செய்யத் தயாராக இருந்து, கொடுந் தவத்தின் பயனாகப்பெற்ற ஓர் வெற்றியை இக் கூக்குரலுக்குப் பயந்து விட்டுக்கொடுத்து விடுவதா என்பதுதான் கேள்வி. இந்தக் கேள்விக்கு பதில் கொடுப்பது போலத்தான் மகாத்மா ஏழுபெயர்களைச் சிபார்சு செய்து அனுப்பித்தார்.

ஆனால் காலிகள் காலித்தனத்தைக் கையாண்டார்கள். மிகவும் புனிதமான வேளையில் காந்திஜியைச் சூழ்ந்துகொண்டு உபத்திரவம் கொடுத்தார்கள். இந்த சம்பவம் நாட்டில் ஒரு கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கிறது.

இத்தகைய ஆர்ப்பாடங்களால் காந்திஜியை பயமுறுத்தி விடலாம் என்று சிறுபான்மை சமூகத்தினர் எண்ணவேண்டாம். காலித்தனத்தில் இறங்கி ஜனங்கள் மனதில் கோபத்தை எழுப்பி நாட்டில் ரத்தக் கிளர்ச்சி உண்டாக்கவேண்டாம் என்பதுதான் நம் பிரார்த்தனை. சிறுபான்மைத் தலைவர்கள் பிறர் வலையில் அகப்பட்டு இப்படி தேசத்தின் ஒப்பற்ற தலைவரை நிந்திப்பதானால் ஜனங்கள் இக்கொடுமையைச் சகிக்கமாட்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் மைனாரிடி பிரச்னையைப் பற்றி கொஞ்சம் தெளிவு செய்ய வேண்டும். சிறுபான்மையோரின் கோரிக்கைகளுக்கு முக்கியமாக மூன்று காரணங்கள் இருக்கின்றன.

1. உண்மையாகவே பெரும்பான்மை சமூகத்தினர் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கமாட்டார்களோ என்ற பயம்.

2. விளம்பரம் பெறுவதற்காக சில தலைவர்கள் ஆசைப்படுவது.

3. வேண்டுமென்றே சுயேச்சைப் போரை முறிக்க சில சுயநலமிகள் செய்யும் சூழ்ச்சி.

முதல்காரணம் மிகவும் நியாயமான படியால் சிறுபான்மைக்கு அநீதி இழைக்கப்படாமல் சட்டங்கள் இயற்ற வேண்டும். அவர்கள் உரிமையைப் பாதுகாக்கப் போதுமான வாக்குறுதிகளைக் கொடுக்கவேண்டும். இந்த வாக்குறுதிகளில் திருப்தி ஏற்படாவிட்டால் சட்டம் அவசியம். காங்கிரஸ் கராச்சி தீர்மானம் மூலமாக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும், சட்டங்கள் இயற்றும்போது காங்கிரஸ் சர்க்கார்கள் சிறுபான்மையோரின் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறார்கள். அவர்கள் மனம் கொதிக்கும்படியாக ஒரு சட்டமும் இயற்றியது கிடையாது. ஆனால் காரணமில்லாமல் மனதைக் கொதிக்க வைத்துக்கொள்ளும் தலைவர்களைப்பற்றி என்ன சொல்வது?

இரண்டாவதாக விளம்பரத்துக்கு ஆசைப்படும் தலைவர்களைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. ஏனென்றால் இவர்கள் உண்மையில் தேச பக்தி உள்ளவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் தலைவர்களானதால் 'ஏட்டி' என்றால் 'போட்டி' என்று சொல்ல ஆசைப்படுகிறார்கள். அவ்வளவுதான்.

மூன்றாவதாக உள்ள தேசத்துரோகிகள் மகா அபாயமானவர்கள். காங்கிரஸ் ஐம்பது வருஷகாலமாகப் போர் புரிந்து, பல தேசத்துரோகிகளை வீழ்த்தியிருக்கிறது. அடக்குமுறையை ஒடுக்கியிருக்கிறது; பதவி வேட்டையைத் தடுத்திருக்கிறது; பிரிட்டிஷ் அதிகாரத்தில் தூண்களான ஒவ்வொன்றையும் ஆட்டிப் பிடுங்கிவிட்டது. ஆனால் வகுப்புவாதம் என்ற மற்றொரு தூணைப் பிடுங்க முடியவில்லை. காந்திஜி அந்தப் போரைத்தான் ராஜ்கோட்டில் இன்று செய்கிறார்.

பேர்போன சுயநலமிகளும், தேசத்துரோகிகளும் இன்றும் சிறுபான்மையோர் என்ற போரால் தேசத்தில் உலாவி வருகிறார்கள். துர்ப்பாக்கியவசமாக அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் ஆதரவு இருக்கிறது. பாமரமக்கள் மனதில் வகுப்பு உணர்ச்சியைத் தூண்டிவிட்டு கலவரம் உண்டாக்கி அதனால் தேச முன்னேற்றத்தைத் தடுக்க முடியும் என்று மனப்பால் குடிக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பலிக்காதென்று தெரிந்து கொள்ளும்போதெல்லாம் காலித்தனத்தில் இறங்குகிறார்கள். இந்த நாடகம்தான் ராஜ்கோட்டில் இன்று நடக்கிறது.

இந்த சமயத்தில் தேச முன்னேற்றத்தில் கருத்துள்ள சிறுபான்மையோர் என்ன செய்யவேண்டும்? தங்களை ஏமாற்றப்பார்க்கும் துரோகிகளைச் சட்டை செய்யக் கூடாதென்று ஓர் கிளர்ச்சி நடத்தவேண்டும். அந்த சுயநலக் கும்பல் தங்களை ஓர் சாக்காக உபயோகித்துக் கொள்ள முடியாதபடி பிரசாரம் செய்ய வேண்டும்.

ஆனால், பொது ஜனங்கள் என்ன செய்யவேண்டும் என்பது கேள்வி. குழப்பம் இன்னும் அதிகரிக்காதபடி அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். தங்கள் நடத்தையாலும் அமைதியாலும் விஷமிகள் எண்ணம் நிறைவேறாமல் செய்யவேண்டியதுதான். ஆனால் அமைதியான கிளர்ச்சி ஆரம்பித்து குழப்பத்தின் மூலத்தைக் களைய வழிதேடவேண்டும்.

ராஜ்கோட் ஜனங்கள் அன்று அமைதியுடன் நடந்துகொண்டது ஆச்சரியமான விஷயம். இவ்வளவு குழப்பங்களுக்கும் காரணமான தாகூர் சாகிபையும் அவர் தர்மந்திரியையும் சமஸ்தானத்தை விட்டு அகற்ற அமைதியான கிளர்ச்சி நடத்துவார்களென்று எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் அவர்கள் ராஜ்கோட்டில் இருக்கும் வரை சூழ்ச்சி நடக்கும்; குழப்பம் தான் உண்டாகும். இந்திய சர்க்கார் உடனே தலையிடுவார்களா?

குறிப்பு

# கல்கத்தாவில்!

ஒரு விதமாக, காங்கிரஸ் காரியக் கமிட்டியும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் ஏப்ரல் 28, 29 தேதிகளில் கல்கத்தாவில் கூடப் போவது நிச்சயமாகி விட்டது.

அபேதவாதக் கட்சி காரியதரிசி ஸ்ரீ ஜய பிரகாச நாராயணரும் அகில இந்திய பொதுவுடைமைக் கட்சியினரான "நாஷனல் பிரன்ட்" ஆசிரியரும் காரியக் கமிட்டி அமைப்பு விஷயமாக நல்ல சமயத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இனி ஸ்ரீ போஸ் காரியக் கமிட்டி அமைக்காமல் இருப்பது சரியல்ல வென்றும் அ.இ.கா.க. கூட்டத்திற்குமுன்பே காரியக் கமிட்டியை நியமித்து விடவேண்டுமென்றும், திரிபுரித் தீர்மானத்தை அனுவசியமாகக் கிளறிக் கொண்டிருக்காமல், அதன்படி உடனே காந்திஜியைக் கலந்து ஸ்ரீ போஸ் காரியக் கமிட்டியை அமைப்பது மிகவும் அவசியமென்றும் கூறுகிறார்கள்.

எப்பொழுது ஒருவிதமாக காங்கிரஸ் ஒரு முடிவு செய்து விட்டதோ அதன்படி ஸ்ரீ போஸ் நடக்க வேண்டியதுதான் ஜனநாயக முறை; அப்படி நடக்க அவருக்கு இஷ்டமில்லையென்றால் கல்கத்தாவில் கூடப்போகும் அ. இ. கா. க. கூட்டத்தில் ஸ்ரீ போஸ்தான் அக்கிராஸனராக இருப்பதற்குத் தான் கோரும் நிபந்தனைகளை வியக்தமாகச் சொல்லட்டும். கமிட்டி அவற்றை ஏற்றால் சரி; இல்லாவிட்டால் ராஜினமா செய்யட்டும். அதுதான் ஜனநாயக விதி. பெருவாரி அபிப்பிராயமும். ஸ்ரீ போஸும் இந்த மாதிரி நெடுநாள் முடிவுக்கு வராமல் காலம் தள்ள முடியாது.

காந்திஜி கல்கத்தாவிற்கு அநேகமாகப் போகக் கூடுமென்றே நம்புகிறோம்; எப்படியாவது போகவேண்டு மென்று வேண்டுகிறோம். காந்திஜியும் போஸும் நேரில் சந்தித்துப் பேசி ஒருவிதமாக நிலைமையைச் சீர்ப்படுத்த வேண்டும். கவிதாகூரும் ஆசார்யராயும் இதைக் கோரி இரு தலைவர்களுக்கும் எழுதியிருக்கிறார்கள். காந்திஜி ஸ்ரீ போஸிற்கு ஒருவிதமாகவும் இடைஞ்சலோ சங்கடமோ ஏற்படுத்தக் கூடாது என்றே தான் இவ்வளவு நாள் திரிபுரி தனக்களித்த அதிகாரத்தையும் செலுத்தாமல் இருந்திருக்கிறார். அதை அறிந்து ஸ்ரீ போஸ் கடிதப் போக்குவரத்திலேயே இதற்குள் காரியக் கமிட்டியை அமைத்திருந்தால் எவ்வளவோ திருப்திகரமாக இருந்திருக்கும்.

காந்திஜி நேரில் பிரசன்னமானால் கல்கத்தாவில் எல்லாம் சரியாகப் போய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

## எங்கும் சமாதானம் என்பதே பேச்சு

எந்த நிமிஷமும் யுத்தம் என்ற எரிமலை குமுறென்று நாசத்தைக் கக்கலாமென்ற நிலைமையில் எங்கும் காதில் படுகிற தென்னமோ சமாதானம் என்ற பேச்சுதான். ஸ்ரீ சேம்பர்லேன் தான் சமாதான வெறி கொண்டிருப்பதாகக் கூறுகிறார்; சமாதானத்திற்ககாவே அல்பேனியாவைக் கைப்பற்றி யிருப்பதாக முஸோலினி சொல்லுகிறார். ஐரோப்பாவில் சமாதானத்தை நிலைநிறுத்துவதுதான் தனது லட்சியம் என்று ஹிட்லர் மேன்மேலும் நாடு பிடிக்க ரகசியமாக வேலை செய்து கொண்டே இருக்கிறார்.

இப்பொழுது மேற்கே யிருந்து மற்றொரு குரலும் கேட்கிறது; அதுவும் ஜனநாயகம் சமாதானம் என்ற பல்லவியை வைத்துக் கொண்டே பேசுகிறது. அமெரிக்காவுக்கு அடிக்கடி இந்த ஆர்வம் மேலிட்டு விடுவதுண்டு. அப்பொழுது தலைவர் ரூஸ்வெல்ட் அழகாக ஒரு பிரசங்கம் செய்வார்.

இப்பொழுது அதுவும் தலைவர் தேர்தல் சந்தர்ப்பம் நெருங்குகிறது; ஐரோப்பாவில் குழப்பம் உச்சநிலைக்கு வந்துவிட்டது. பேச்சுக்கு இதை விட்டால் வேறு எங்கே இவ்வளவு அழகிய சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறது? பிரிட்டன் முதல் எல்லா நாடுகளும் கதிகலங்கிப்போய் இருக்கிறபொழுது தலைவர் சவாலாக சர்வாதிகாரிகளுக்கு ஒரு தந்திகொடுத்தால்அது எவ்வளவு அமர்க்களப்படும்?ஐரோப்பிய ஜனநாயகங்கள் எல்லாம் கொஞ்சம் பயம்தெளிந்து மூச்சு விடுகின்றன. சமயத்தில் வயிற்றில் பால் வார்க்கும் புண்ணிய புருஷர் என்று ரூஸ்வெல்டை உலகமே போற்றினால் தேர்தலில் மூன்றும் தடவையாக வெற்றி பெறுவதில் என்ன சந்தேகம்?

ரூஸ்வெல்ட் உலகத்தையே அமெரிக்காவின் சிறகுகளின் கீழ் இழுத்துப் போட்டுக் கொண்டு காப்பாற்றும் தோரணையில் சர்வாதிகளுடன் பேரம் பேசுகிறார். "நீர் யாருங்காணும் இங்கே தலையிட?" என்று அவர்கள்

ஒரு வேளை கேட்டு விட்டால் என்ன செய்கிற தென்று ரூஸ்வெல்ட் ஐரோப்பிய நெருக்கடியில் தான் தலையிடுவதற்குக் காரணங்கள் கூறுகிறார். அங்குதான் குட்டு வெளுக்கிறது.

"அமெரிக்காவிற்கும் உலக விவகாரங்களில் ஒரு பொறுப்பு இருக்கிறது; அவை அதையும் பாதிக்கும்" என்கிறார் ரூஸ்வெல்ட். அதுதான் உண்மை. இன்று இருக்கும்நிலைமையில் ஐரோப்பிய ஜனநாயகங்கள் மட்டுமல்ல அமெரிக்காவும்கூட பாதிக்கப்படும் என்ற காரணத்தால்தான் ரூஸ்வெல்ட் சமரஸம் பேச வருகிறார். இதற்குமுன் பல நாடுகள் கபளீகரம் ஆனபொழுதெல்லாம் தலைவரின் முந்திரிக்கொட்டை ஆர்வம் எங்கே போயிருந்தது? எனவே ஜனநாயக தத்துவப் பேச்சுகளெல்லாம் வெறும் வெளிவேஷம்; சுயநலம்தான் உள் காரணம். சர்வாதிகாரிகள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

## ஏப்ரல் 28 தேதி

ஏப்ரல் 28-ம் தேதி ஒரு முக்கியமான தினமாகத் தான் இருக்கும் போலிருக்கிறது. இங்கே ஸ்ரீ சுபாஸ் சந்திர போஸ் காரியக் கமிட்டியைக் கூட்டி பேசப் போகிறார். காங்கிரஸின் எதிர்காலமே அன்று தீர்மானமாகும்.

ஹிட்லர் அன்று ரீட்சைக் கூட்டிப் பேசப் போகிறார். தலைவர் ரூஸ்வெல்டிற்கு பதில் அளிக்கப் போகிறாராம். என்ன பதில்?

ரூஸ்வெல்ட் சில நாடுகளின் பெயர்களைக் குறித்து (இங்கிலாந்தும் அவற்றில் ஒன்று!) அவற்றை சர்வாதிகாரிகள் எக்காரணத்தைக் கொண்டும் குறைந்தது பத்து வருஷங்களாவது தொடாமல் இருக்க வேண்டுமென்கிறார்! அதற்கு சர்வாதிகாரிகள் சம்மதித்தால் தான் தலையிட்டு நாடுகளிடையே சமரஸம் பேசி சமாதானத்தை நிறுவுவாராம். ஏதோவொரு கதை யுண்டு: மலையைத் தூக்கி என் தலையில் வைத்து விடு...என்று. அந்த மாதிரி இருக்கிறது ரூஸ்வெல்ட் பேச்சு.

ஹிட்லரின் பதிலை ஜெர்மன் பத்திரிகைகள் ஒருவாறு இப்பொழுதே வெளிப்படுத்தி விட்டன. "ஆகா! ஆட்சேபணை இல்லை.நாடுகளைத் தொட வேண்டுமென்று எங்களுக்கு ஆசையா என்ன? கிடையவே கிடையாது. வார்ஸேல்ஸ் ஒப்பந்தம் இன்னும் பூராவாக சம்ஹாரம் ஆகவில்லை. காலனிகள் விஷயமாக எங்கள் கோரிக்கையைப் பூர்த்தி செய்யுங்கள். எப்பொழுதும் சமாதானமாகவே இருப்போம்!" என்பது போல ஹிட்லர் பேசுவார்.

ஆனால் அத்துடன் நின்று விட்டால் அவருடைய மெய்ன் காம்ப் திட்டம் என்ன ஆவது? பிரான்ஸ் இருக்கிற வரையில் ஹிட்லருக்குத் தூக்கம் வருமா?

சர்வாதிகாரக் கொக்கின் தலையில் வெண்ணையை வைத்துப்பிடித்து விடலாம் என்று ரூஸ்வெல்ட் தந்திரமாகப்பேசுவதாக எண்ணுகிறார்; ஐரோப்பிய ஜனநாயகங்களும் "சபாஷ்!" என்கின்றன. ஆனால் ஹிட்லர் ருசிகண்ட 'ஷார்க்'. யுத்தம் வந்தால்கூட யாராலும் அவர் ருசியை மாற்ற முடியாது.

## ரூஸ்வெல்ட் பூசாரி

ஹிட்லர் பிசாசை (சர்வாதிகாரப் பிசாசை) அடக்க இன்று ரூஸ்வெல்ட் முன் வந்திருக்கிறார். ஒரு பத்து வருஷங்களுக்காவது மந்திரம் போட்டு அதை அடக்கி வைத்து விடலாம் என்று பார்க்கிறார். அவருக்கே தெரியும் அதை அடக்க முடியாதென்று. ஆனால் உலகத்தின் முன் தானும் ஒரு மகத்தானப் பிரயத்தினம் செய்ததாகக் காட்டிக் கொள்வதற்காகவே இன்று முன் வந்திருக்கிறார்.

இன்று இப்படி நடந்து கொண்டுவிட்டால் நாளை நெருக்கடியில் இஷ்டம்போல் நடந்து கொள்ளலாம் அல்லவா?

ஆமாம். நாளை நெருக்கடி வரப் போகிறதென்று எல்லோரும் எதிர் பார்க்கிறார்கள் என்பதற்கு எங்கும் அத்தாட்சிகள் காணப்படுகின்றன. எங்கும் யுத்தத்திற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன. பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் (முன் ஜாக்கிரதையாக) மால்டாவினருகிலும் ஜிப்ரால்டர் அருகிலும் கூடுகின்றன. பிரஞ்சு கப்பல்களும் சும்மா இருக்கவில்லை. கிரீஸில் படை திரட்டுகிறார்கள். சர்வாதிகாரிகள் அடுத்த படியாக சேர்ந்து ஏதோ செய்யப் போகிறார்கள் என்று அமெரிக்காவிற்கு நிச்சயமாகத் தகவல் தெரிகிறதாம்!

# தென்றல் காற்று

ரூஸ்வெல்ட் சர்வாதிகாரிகளுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டார். பத்து வருஷங்களுக்கு எந்த அயல் நாட்டையும் பக்ஷணம் செய்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுங்கள் என்று கேட்கிறார். சர்வாதிகாரிகளின் வாக்குறுதிகளிலும் சத்தியத்திலும் சேம்பர்லேனுக்கு இருந்த நம்பிக்கைப் பிசாசு இப்போது ரூஸ்வெல்டைப் பிடித்துக்கொண்டது.

* * *

ரூஸ்வெல்ட் ஓர் பக்காப் பேர்வழி. பின்னல் அவர் செய்யப் போகும் கடுமையான கார்யங்களுக்கு ஓர் காரணத்தை உண்டாக்கிக்கொள்ளத்தான் இப்படிச்செய்திருக்கிறார் என்று ஒரு நண்பர் சொல்கிறார். இதை சர்வாதிகாரிகள் அறிந்து கொண்டதுபோல் வரும் 28-ந் தேதி பதில்வெட்டுக் கோரிக்கைகள் விடுக்கப் போகிறார்களாம்.

* * *

இந்த சமயத்தில் சர்வாதிகாரிகள் இந்திய சர்க்கார் கையாளும் முறையைக் கடைப் பிடித்தால் நன்றாயிருக்கும். பதில் வெட்டுக் கோரிக்கை, அதற்குக் காரணம், இதெல்லாம் எதற்காகக் கொடுக்க வேண்டும்? இந்திய சர்க்கார் மாதிரி "சில சட்ட சம்பந்தமான தவறுகள் (Technical defects) இருக்கின்றன. ஆகையால் உங்கள் கோரிக்கையைத் தள்ளி விட்டேன்" என்று ஒரே போடாகப் போட்டு விடலாம்.

* * *

ரூஸ்வெல்ட் கோரிக்கையில் சுயேச்சை தேசங்கள் மேல் சர்வாதிகாரிகள் படையெடுக்கக் கூடாது என்று கண்டிருக்கிறது. அதில் சைனு சேர்க்கப்படவில்லை. இரண்டாவதாக அமெரிக்காவின் பெயரைக் கூடக் காணோம். மூன்றாவதாக, சுயேச்சை நாடுகள் என்று போட்டுவிட்டு பாலஸ்தினத்தை ஜாப்தாவில் சேர்த்திருக்கிறார்கள். பாலஸ்தினம் சுயேச்சை நாடா? வெட்கக் கேடு!

* * *

இவ்வளவு குற்றக் குறைகளடங்கிய கோரிக்கையை இந்திய சர்க்காரா யிருந்தால் ஒப்புக் கொள்வார்களா? அதுவும் குற்ற மில்லாத தீர்மானங்களையும் மசோதாக்களையும் நிராகரிக்கும் இந்த சர்க்கார். ஆகவே, இந்திய சர்க்காரின் சாமர்த்தியத்தை சர்வாதிகாரிகள் கொஞ்சம் கடன் வாங்கிக்கொண்டு ரூஸ்வெல்ட் கோரிக்கையை நிராகரித்து விடுவார்களாக!

* * *

உலகம் படை திரட்டிக்கொண்டிருக்கிறது. எப்போது யுத்தம் நடக்குமோ வென்று ஐரோப்பாவில் எல்லோரும் வயிற்றில் நெருப்பை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் பரோடாவில் நன்றாய் ஜன்னல் அலங்கரிக்க போட்டி நடத்துகிறார்கள்! ரோம் எரியும்போது நீரோ பிடில் வாசிப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பிடில் வாசிப்பதும் ஜன்னல் அலங்காரமும் வெவ்வேறு சமாசாரங்கள் என்று திவான் ஓர் அறிக்கை வெளியிடுவார்.

* * *

'ஜன்னல் அலங்கரிப்பது' என்ற சொற்றொடருக்கு ஆங்கிலத்தில் 'ஊழலை மறைத்து வெளிப்பகட்டு செய்வது' என்பது அர்த்தம். பொதுவாக ஜன்னல் அலங்கார வித்தை சமஸ்தானங்களுக்குத் தற்போது பொருத்தமானதா என்பதை ஸர். ஸி.பி. ராமஸ்வாமி ஐயர்தான் சொல்ல வேண்டும்.

* * *

பெரிய விஷயங்களையும் ஆபத்துக்களையும் பற்றி எல்லோரும் சிந்திக்கும்போது நமது தேசத்தில் சிலருக்குச் சில்லறை விஷயங்களில் புத்தி செல்கிறது. சிலர் ஜன்னலை அலங்காரம் செய்கிறார்கள். வேறு சிலர் பைல்களை அலங்காரமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அழுக்குப் படாமல் பைல்களை வைத்துக்கொள்ளும் நபருக்கு ஒரு பிரைஸ் கொடுக்கவேண்டும். அசட்டுத்தனமாய் அறிக்கை வெளியிடும் தலைவருக்கு மற்றொரு பிரைஸ் கொடுக்க

வேண்டும். காங்கிரஸ் தலைவருக்குத் தெரியாமல் விருந்து சாப்பிடும் நபர்களை யாராவது கண்டுபிடித்துச் சொன்னால் பரிசு உண்டு! இப்படியாக சில்லறை விஷயங்களை ஆராய ஓர் கமிஷனை நியமிக்கலாம்.

* * *

ஸாம்ஸன் தன் தலையிலேயே தூணைப் பிடுங்கிப்போட்டுக்கொண்டு உயிர் நீத்தான். அந்த மாதிரி வேண்டாத விஷயங்களைத் தலையில் போட்டுக்கொண்டு கஷ்டப்பட்டால் அதற்குக் காரணம் யார்? சில்லறை விஷயங்கள் உண்டாகிறதென்றால் அதற்குக்காரணம் யார்? தலைவிதி, ஐயா, தலைவிதி.

* * *

ஒரு மனிதன் துரதிருஷ்ட வசமாக குற்றவாளியானான். அவனைச் சிறைக்கு அழைக்கும்போது வர மறுத்தான். ஆனால் அவனை விட்டார்களா? சிறைத் தண்டனை முடிந்தபிறகுதான் அவனை வெளியே விட்டார்கள். ஆனால் அப்போது அவன் சிறையை விட்டு வெளியே வர மறுத்தான். ஜெயிலர் திடுக்கிட்டு "ஏனப்பா! முதலில் சிறைக்குள் வர பயப்பட்டாயே, இப்போது ஏன் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டேன் என்கிறாய்?" என்று கேட்டார். "ஸ்வாமி! இந்த இடம் மற்றெல்லாவற்றையும் விட சுகமாயிருக்கிறது" என்றான். லியோடால் ஸ்டாயின் இந்த கற்பனைக்கும் சில காங்கிரஸ் வாதிகளின் அரசியல் பாதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப்பற்றி இரண்டு பெரிய தலைவர்கள் அறிக்கை வெளியிடுவார்கள். அதற்குப் பிறகு ஓட்டைப் படகுகள் பரிசிலனை நடைபெறும்.

* * *

டாக்டர் ஜான்ஸன் ஆங்கிலேயர்கள் இதாலியர்களாகப் போய் ஆண்மையை இழந்து விட்டார்களென்று முன்பு இடித்துக் காட்டினர். ஆனால் இப்போது நாம் இழந்த ஆண்மையைப்பற்றிக் கூறவும் ஆபீஸ் சிறையின் தத்துவங்களை எடுத்துப் பாடவும் ஒருவர் தேவை. டாக்டர் ஜான்ஸன் மாதிரி உருவமுள்ள ஸர் மகமத் உஸ்மான் இந்த உத்யோகத்துக்கு நியமிக்கப்படலாம். புதிதாக நியமிக்கப்பட்ட ரேடியோ அட்வைஸரி கமிட்டி சிபார்சின் பேரில் ஸர் மகமதின் பாடல்கள் நமது ரேடியோ நக்ஷத்திரங்களால் வழக்கப்படி செவிக்குத் துயரம் கொடுக்கும் முறையில் பாடப்படும்.

* * *

ராஜ கோட்டில் மகாத்மா காந்தி தியானம் செய்யும் வேளையில் சிலர் குழப்பம் விளைவித்தார்கள். ஆனால் அது அவ்வளவாகப் பலித்திராது. ஏனென்றால் பூசை வேளையில் கரடி விட்டு ஓட்டும் இந்த வேலையில் நமது ஹிந்தி எதிர்ப்புத் தியாகிகளுக்கு ராஜகோட் கிரஸியர்களும் பயத்துக்களும் ஒருநாளும் ஈடாக மாட்டார்கள். ஆகையால் தர்பார் வீரவாலா தந்தி மூலம் சென்னையிலிருந்து ஹிந்தி எதிர்ப்பு படைகளை அழைத்துக் கொள்ளப்போகிறார். அதனால், ஹிந்து எதிர்ப்பு இயக்கம் சென்னையில் பலஹீனம் அடையலாம். இதைத் தடுக்க வேடுமானால் உடனே ஸர் பன்னீர்செல்வம் வைஸ்ராயைப் பேட்டி காண டெல்லிக்குப் போகவேண்டும். ஜின்னா செய்தது போல. வைஸ்ராய் ஸர் பன்னீர்செல்வத்திற்குச் செவி சாய்க்கா விட்டால் ஸெஸில் ஹோட்டலில் அவர் உண்ணாவிரதம் செய்வார்.

# வார நடப்பு

ராஜ்கோட்டில் "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது" போல, சமரசம் ஒரு வழியாக முடிந்தது என்று நிம்மதி யடையும் சமயத்தில் "மறுபடியும் ராஜ் கோட்டில் தகரார்" என்ற செய்தி வந்திருக்கிறது. சீர்திருத்தக் கமிட்டியின் அமைப்பில் வகுப்பு பிரச்னை வந்து மாட்டிக் கொண்டுவிட்டது. சிறுபான்மையோருக்கு பிரதிநிதித்வம் வேண்டுமாம். சீர்திருத்தக் கமிட்டியின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தக் கூடாது. இதனால் காந்திஜி, சிறுபான்மையோரான முஸ்லீம் பயத்துகளுக்கும், ராஜ்கோட் பிரஜா மண்டலுக்கும் சேர்ந்தாற்போல் பிரதிநிதித்வம் அளிக்க சக்தியற்றவரா யிருக்கிறார். ஸர்தார் படேலின் சார்பாக கமிட்டி அமைப்புக்கு ஏழு நபர்களை தாகூர் சாகிப்புக்கு சிபார்சு செய்து அனுப்பி, மேற்கூறிய நபர்கள் பொதுவாக தேச நன்மைக்காக எல்லோருடைய நலனையும் அபேக்ஷித்து பாடுபடுவார்கள் என்றும் அறிக்கை விடுத்திருக்கிறார். இதனால் அதிருப்தி யடைந்த சிலர் அவருடைய தீர்மானத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

திருபுரி மகாராஜா தன் சமஸ்தான ஜனங்களுக்கு பொறுப்பாட்சி அளிக்கப் போவதாக ஒரு "ப்ரோக்ளமேஷன்" விடுத்திருக்கிறார். அமுலுக்குக் கொண்டுவரப் போகும் புதிய சட்டப்படி சமஸ்தானத்தில் ஒரு சட்டசபையும் ஒரு ப்ரிவி கவுன்சிலும், ஒரு மந்திரி சபையும் அமைக்கப்படும் என்று தெரிகிறது. இன்னும் ஒரு வருஷத்திற்குள் இப்பொறுப்பாட்சியை அமுலுக்கு கொண்டுவர மஹாராஜா யத்தனிக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேரு அலஹாபாத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் பொழுது பிரிட்டிஷாரின் அயல்நாட்டுக் கொள்கையை அலசிக் காண்பித்தார். சர்வதேச யுத்த நெருக்கடியில் அவர்கள் கேவல நிலையை தூஷித்தார். சமீபத்தில் காமன்ஸ் சபையில் கொண்டுவந்த 1935ம் வருஷத்திய இந்திய அரசியல் திட்டத்தின் சீர்திருத்த மசோதாவைக் கண்டித்தார். மத்திய சர்க்காரின்பேரில் அதிக அதிகாரத்தை சுமத்துவதை அவர் எதிர்த்தார், யுத்தம் வந்தால் இந்தியா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு உதவிபுரியாது என்று தீர்மானமாகக் கூறினர்.

பம்பாய் மாகாண சட்ட சபையில் போட்டிப் பந்தயங்களைக் குறைக்கவும், நிறுத்தவும் ஒரு மசோதா கொண்டுவரப் போவதாகத் தெரிகிறது.

ஐரோப்பிய நிலைமை பழுத்திருக்கிறது. அமெரிக்கா தலைவர் ரூஸ்வெல்ட் ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் செய்தி அனுப்பி இருக்கிறார். சர்வதேச நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை கொஞ்சமேனும் பயமில்லாமல் எடுத்துக்கூறி, ஹிட்லரையும் முஸோலினியையும் "நாங்கள் இன்னும் குறைந்தது பத்து வருஷங்கள் வரையில் சுதந்திர நாடுகளைத் தாக்குவதில்லை" என்ற உத்தரவாதத்தை அளிக்கும்படி கேட்கிறார். சென்ற செப்டம்பரில் சொன்னபடி பல சுதந்திர நாடுகளின் கூட்டம் ஒன்று கூட்டுவது அவசியம் என்று தெரிவிக்கிறார்.

ரூஸ்வெல்ட் அனுப்பிய செய்திக்கு ஹிட்லரும் முஸோலினியும் இன்னும் ஒன்றும் பதிலளிக்கவில்லை. இருவரும் வெகு தீவிரமாகக் கலந்து பேசுகிறார்கள் என்று தெரிகிறது. இதை ஆலோசிக்க ஜெர்மனியில் ரீச் பிரதிநிதி சபை கூடப் போவதாக அறிக்கை கூறுகிறது.

ஹிட்லரும் முஸ்ஸோலினியும் இருக்கிற நினைப்பில், அவ்வளவு சாதகமாக பதில் அளிக்க மாட்டார்கள் என்று தெரிகிறது.

ரூஸவெல்ட் கோரிய உத்தரவாதத்தை அச்சுக்காரர்கள் கொடுக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. சுதந்திரநாடுகள் கூட்டம் ஒன்று கூட்டுவதற்கு அவர்கள் இஷ்டப்படவில்லை.

தலைவர் ரூஸ்வெல்ட் சர்வாதிகாரிகளுக்கு அனுப்பிய செய்தியை இங்கிலாந்திலும் பிரான்சிலும் எல்லோரும் ஏகமனதாக புகழ்கிறார்கள் ரூஸ்வெல்ட்டை பல தேசங்கள் பாராட்டுகின்றன.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி போலந்துக்குக் கொடுத்ததைப்போல் கிரீஸுக்கும் ருமேனியாவுக்கும் ஸர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்பினின்றும் காப்பாற்றுவதாக உத்தரவாதம் அளித்திருக்கிறார்.

அல்பேனியாவுக்கு இத்தாலிய மன்னர் விக்டர் எம்மேனியல் அரசானர்.

# மேகம்

(ஸ்ரீ கு. பா. வேங்கடாசலம்)

---

விண்ணிலே மிதந்து சென்றிடுவாய்—காற்றின்
வேகத்தாலெங்கெங்கோ ஓடிடுவாய்,
மண்ணிலே மழையாகப் பெய்திடுவாய்—இங்கு
மடிந்த பயிர்க்குயிரூட்டிடுவாய்.

காடுவளரக் கழனிவிளைய—நீ
கனத்தமழையைச் சொரிந்திடுவாய்,
நாடு செழிக்க நீ செய்திடுவாய்—எல்லா
நலங்களும் தந்து காத்திடுவாய்.

பஞ்சுபொதிகள்போல் தொங்குகிறாய்—இன்னும்
பலவித உருவத்திலோங்குகிறாய்,
பஞ்சத்தால் வாடிடும் மக்களுக்கு—உந்தன்
பார்வையால் பாக்கியம் தந்திடுவாய்.

காலனைப்போல நீ தோன்றுகிறாய்—பார்த்து
களியாட்டமாடுது மயில்களெல்லாம்,
நீலக்குயிலெங்கே சென்றதுவோ—அதன்
நேசக்கவிதையை மறந்துவிட்டு.

ஏழையுவர்கள் வாழ்த்துவார்கள்—உன்
ஏற்றத்தால் மக்களேக்கந்திரும்,
கோழையைப் போலோடி ஒளிந்திடாதே—மழையைக்
கொட்டி உயிரை வளர்த்திடுவாய்.

# கிராம வாசியின் தேவை

(அரயபுரம் ஸ்ரீ. வி. வெங்கடராமய்யர் எம். ஏ., பி. எல்.)

நமது தேசத்தில் கிராமங்கள் புத்துயிர் பெற்று ஓங்கி வளர வேண்டுமானால் மற்ற அம்சங்கள் நிற்க கிராம நிர்வாக அங்கங்களில் பற்பல சீர்திருத்தங்களும் மாறுதல்களும் அவசியமாகத் தோன்றுகின்றன. தற்காலம் சர்க்கார் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அங்கங்களில் முக்கியமானவை நான்கு. அவை கிராமத்தலைவர், கிராம கோர்ட்டு, பஞ்சாயத்து போர்டு, கிராமக் கலாசாலை. இவைகளில் முக்கியமான அம்சம் கிராமக் கல்வி திட்டம் தான். இந்த திட்டம் பூராவும் மாறுதலடைந்து புதியதாகவே அமைக்கப்படவேண்டியது அவசியமாகும். மற்ற மூன்று அங்கங்களைப் பற்றி மட்டில் இப்பொழுது சில சீர்திருத்தங்களைக் கவனிப்போம்.

தற்காலம் சர்க்காரால் நியமிக்கப்பட்டு வேலைபார்த்து வரும் கிராமத் தலைவர்கள் உத்தியோகம் வகிப்பவர்களே தவிர கிராமத்துக்குத் தலைவர்களாக கருதப்படுவர்களல்லர். இப்பொழுதுள்ள திட்டப்படி அவர்கள் வேலைகளில் வரித்தொகைகளை வசூல்செய்து கஜானாவில் கட்டுவது தவிர மற்றெதுவும் முக்கியமானதுமில்லை, உபயோகமானதுமில்லை. சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குச்சரிவர கீழ்ப்படிந்து நடந்து கொண்டும், அவர்கள் போடும் உத்திரவுகளைத் தலைமேல் வகித்துக்கொண்டும், அவர்கள் திருவாக்குக்கு எதிர்வாக்கு இல்லாமலும் நடந்து கொள்ளவேண்டியது தான் அவர்கள் கடமை. இல்லாவிட்டால் சில்லறையான தப்புகள் கண்டு பிடிக்கப்பட்டு,அதிக ஆர்ப்பாட்டமில்லாமல்வேலையே போய்விடும். இதே வேலைக்கு மறுநாளே நூற்றுக்கணக்கில் மனுதார்கள் கூடுவார்கள். சம்பளமோ மாதம் ரூ. 15 கூட இல்லை. இப்பேர்ப்பட்ட வேலையை வகித்து வருகிறவர்களிடமிருந்து கிராமப் புனருத்தாரணத்துக்கு ஆதாரமாக எவ்விதமான ஊக்கத்தையும் வேலையையும் எதிர்பார்ப்பது பிரயோஜனமற்றது. இவர்கள் எல்லோரையும் தள்ளிவிட்டாலோ ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தத்தளிக்கும். கிராமவாசிகளையே, கௌரவ பதவி ஏற்றுக்கொண்டு, கிராம வேலைகளைச் செய்யும்படி செய்வதில் எனக்கு கொஞ்சமேனும் நம்பிக்கையே கிடையாது. கௌரவத்தை ஏற்றுக்கொள்ள எல்லோரும் முன் வருவார்கள். ஆனால் இலவசமாக வேலை நடக்காது. கௌரவம், அதிகாரம், திறமை, சம்பளம், நான்கும் சேர்த்துக் கொடுத்தாலும் கூட பலர் தண்டவேலை தான் செய்வார்கள்.கிராமப் புனருத்தாரண வேலை சுலபமானதல்ல. அதைச் செய்ய மேற்சொன்ன நான்கு அம்சங்களுடன் உற்சாகமும், தியாகபுத்தியும், ஏராளமான பொறுமையும் வேண்டும். இதைப் பற்றி சிலர் வெகு சுலபமாக பேசி விடுகிறார்கள்; பத்திரிகையில் எழுதி விடுகிறார்கள். இந்தப் பிரச்னையை அமுலுக்குக் கொண்டு வர ஒரு வழி தான் எனக்கு தோன்றுகிறது.

இப்பொழுதுள்ள கிராமத் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கூறியபடி திறமை வாய்ந்தவர்களை மட்டில் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்குக் கொஞ்சம் பென்ஷன் கொடுத்து விட வேண்டியதுதான். கிராமங்களை மறுபடியும் பிரித்துக்கட்டி வருஷம் ஒன்றுக்கு சுமார் ரூ. 20,000/-க்கு மேல் வரி வசூலாக வேண்டிய ஒரு தொகுதிக்கு ஒரு தலைவர் விகிதம் நியமித்து அவருக்குச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 25க்கு மேல் 30 வரையில் கொடுக்க வேண்டும். இப்படி அமைப்பதில் வேலை யிழந்தவர்களுக்குக் கொஞ்சம் ஈவு சம்பளம் கொடுத்த பிறகும் சர்க்கார் செலவுகணக்கிலும் கொஞ்சம் மிச்சமே காட்டுமென்று நினைக்கிறேன். இப்படி புதிதாய் நியமிக்கப்படும் கிராமத் தலைவர்கள் சாதாரணமான கல்விப் பயிற்சியுடன் புது இயக்கங்களில் நம்பிக்கையும் ஊக்கமும் உள்ளவர்களாகப் பார்த்து நியமிக்கவேண்டும். அவர்களுக்கு இப்பொழுதுள்ளதை விட அதிகமாக

மதிப்பும் கௌரவமும், அதிகாரமும். கொடுக்கவேண்டும். அதற்கு ஏற்றபடி அவர்கள் அதிக வேலையும் ஏற்றுக் கொள்ளுவார்கள். அப்பொழுதுதான் அவர்களுக்குக்கிராமங்களில் சரியான செல்வாக்கு ஏற்படும். அநுபவத்தில் கிராமங்களில் வேலைகள் பெரும்பாலும் அதிகாரத்தைக் கொண்டு நடைபெற வேண்டுமே யொழிய பொதுஜனநாயகத்தினுல் நடக்காது. எந்தப் பிரச்னையை எடுத்தாலும் சிலர் ஜனநாயகத்துக்கு ஆபத்து வந்து விட்டதென்றும், பொது ஜன அபிப்பிராயத்தின் மேன்மையை உணரவேண்டு மென்றும், அதிகாரவர்க்கத்தை ஒழித்து விடவேண்டுமென்றும், வகுப்பு பிரிதிநிதித்வத்துக்கு இடம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டே வருகிருர்கள். இதெல்லாம் கேட்பதற்கு இனிமையாகத் தானிருக்கிறது. மனதுக்கும் திருப்தியாகத்தான் தோன்றுகிறது. அநுபவத்தில் வேலை நடக்கவேண்டுமானுல் ஒரு அதிகாரிக்கு அதிகாரம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். சரியான தலைவர்களை பொருக்கி எடுத்து அவர்களிடம் கிராம அதிகாரம் பூராவும் ஒப்புவித்து விடலாம்.

கிராம பஞ்சாயத்து போர்டுகளில் இப்பொழுதுள்ள சட்டப்படி கிராமத் தலைவர் மெம்பராகக்கூட இருக்கக்கூடாதாம். கிராமத் தலைவரே போர்டில் தலைமைவகிப்பது தான் நல்லவழியாக எனக்குத் தோன்றுகிறது. அநுபவத்தில் பல போர்டுகளில் வேலைகள் ஒன்றுமே நடைபெறுவதில்லை. கிராமத் தலைவர் பொறுப்பிலிருந்தால் கடிதப் போக்கு வரத்தாவது சுலபமாய் நடக்கும். அவர் மற்ற வேலைகளுடன் லெவ்துகையை கஜானுவிலிருந்து வாங்கியாவது வருவார். தலைவருக்கு மற்ற அதிகாரிகளிடம் அடிக்கடி பழகும் சந்தர்ப்பங்கள் உண்டு. அத்துடன் அவருக்கு, போர்டு விஷயமான சில ஆலோசனைகள்செய்யவோ, சில திட்டங்களுக்கு அனுமதி வாங்கவோ, சௌகரியங்கள் உண்டு. இப்படியிருக்க எலெக்ஷன் மயமான பஞ்சாயத்து போர்டுகளில் கிராமத்தலைவர் சர்க்கார் உத்தியோகஸ்தரானதால் அவர் சம்பந்தமே கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு பெரும்பிழையாகக் கருதுகிறேன்.

நிற்க, அனுபவத்தில் அதிக ஊக்க முள்ளவர்கள் இல்லாத கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகள் தாங்குகின்றன. தீவிரமான கிராமங்களில் பஞ்சாயத்து போர்டுகளில் கக்ஷிப்பிரதிகக்ஷியும் தீவிரமாகவே ஏற்படுகிறது. இந்த போர்டுகள் சம்பந்தப்பட்ட சட்டத்தை ஏற்படுத்தின சட்டசபை மெம்பர்கள் சரியான ஜனநாயக அபிமானிகள். போர்டுகளில் வேலைகளை அனுபவித்தபின் அவர்கள் என்ன நினைக்கிருர்களோ தெரியவில்லை. இப்பொழுது ஐரோப்பாவில் நடைபெறும் அரசாங்கங்களைக் கவனித்துப் பார்த்தால் ஜனநாயகத்துக்கு ஒரு வரம்பும், சர்வாதிகாரத்துக்கு ஒரு எல்லையும் ஏற்படுவதுதான் உலகத்துக்கு க்ஷேமமென்று தோன்றுகிறது. இந்நாளில் ஜனநாயகத்தைக் குறித்து அதிக ஆணையிட வேண்டுவதில்லை யென்று தெரிகிறது. ஆகையால் பொதுஜன பிரதிநிதிகளடங்கிய பஞ்சாயத்து போர்டுகளையும், புதியதாக அமைக்கப்படும் கிராமத் தலைவர்களிடமே ஒப்புவித்து அவைகளின் வேலைத் திட்டங்களுக்கும் வரவு செலவு கணக்குகளுக்கும் கிராமத் தலைவரையே பொறுப்பாளியாக ஏற்படுத்துவதில் நலமேயொழிய தீங்கொன்று மில்லை.

மேற் கூறப்பட்ட அபிப்பிராயங்களை, விஷய மறிந்தவர்களும் தலைவர்களும் ஆலோசனை செய்து தீர்மானிக்கும் பொருட்டும், அவர்கள் தீர்மானித்து ஏற்படுத்தும் சீர்திருத்தங்கள் அனுபவத்துக்கு ஒத்து இருக்கும் பொருட்டும் குறிப்பிடப் பட்டவையே யொழிய கக்ஷிவாதம் செய்வதற்காக அல்ல.

# பாலைவனத்திலோர் அபயம்

(ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.)

தலைவன் தலைவிக்குமுள்ள உள் நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கக் கவிகள் அகத்துறையை வகுத்தனர். இந்நிகழ்ச்சிகளையே தெய்வ சம்பந்தப்படுத்தி, நானாவித வர்ணங்களில் குழைத்து அநேக சொற் சித்திரப் படங்களை அடியார்களும் பக்தர்களும் நமக்களித்திருக்கிறார்கள்.

பக்தியென்பது பகவானிடத்தில் மனிதனுக்கு ஏற்படக்கூடிய அன்பு. இவ்வன்பு நம்முள்ளத்தில் முளைத்துப் பழுத்துக் கனிந்து விட்டால், அதைச் சுவைத்து உலகத்தை மறந்து விடுவோம். அது உண்ண உண்ணத் தெவிட்டாது.

அந்தப் பேரின்ப வாழ்விற்காகத் தொலையாத யாத்திரை செய்கிறோம். வழியிலே எவ்வளவோ கஷ்டங்கள். சில சமயங்களில் ஒரு கன அந்தகாரம் நம்மைச் சூழ்ந்து விடும்; ஆனால் நமக்கு முன் நம்முடைய உயர்ந்த லட்சியங்களும், கனவுகளும் ஒரு வானவிற்போல அதிக சோபையோடு விளங்கிக்கொண்டிருக்கும்; மற்றுஞ் சில வேளைகளில் வறண்ட பாலைவனம் விரிந்து கிடக்கும். அப்பொழுது பகவானுடைய அருள் மொழிகள் நம் செவிகளில் விழும். "அப்பா, குழந்தாய்! பயப்படாதே இப்பாலை சீக்கிரம் போய் விடும்; அப்பால் வாரிப் பருக அமிருத ஓடைகள் பலவுண்டு" என்று அவர் சொல்லி நம்மைத் தேற்றி மெதுவாய் அழைத்துப் போவார்.

இந்நிலையைத்தான் பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் தம் திருவரங்கக் கலம்பகத்தில் வெகு அழகாய்ச் சித்திரிக்கிறார்.

ஒரு பாலை வனம். கடற் போலப் பரந்து கிடக்கிறது. கண்ணுக் கெட்டின வரையில் மணற்குவியல்தான்.

ஒரு தலைவன் தன் தலைவியைத் தேற்றுகிறான்.

"ஏழு குதிரை கட்டிய தேரின்மீது தினகரன் வான வீதியில் விரைந்து செல்லுகிறான். வெயிலினால் முழு மதிபோலுள்ள உன் முகத்தில் வியர்வை அரும்பி விட்டதே. நீ கவலைப்படாதே; கொஞ்ச தூரம் போனால் பாலை யகன்று விடும். இதற்கப்பால் ஒரு தங்கக் கோயிலுண்டு. அதன் பக்கத்தில் சந்திர புஷ்கரணியிருக்கிறது. தங்கப்புன்னை மர நிழலுண்டு; நம்மைக் காப்பாற்ற உயர்ந்த மதில்களுண்டு; தாபந்தீரத்தோயக் காவரியுண்டு; செவிகள் பருக மதுரகத்தின் மதுரமான இசையுண்டு" என்று ஓசையின்பமும் பொருளின்பமும் சொட்டச் சொட்ட பாட்டை முடித்திருக்கிறார் அய்யங்கார்.

'முன்னமேழ் புரவியார் இரவிகாய் வெயிலினன்
முத்தரும்பிய கலா முழு மதித் திரு முகத்
தன்னமே! இன்னமோர் காவதம் போது மேல்
அகலுமிப்பாலை யப்பால் அரைக் காவதம்
என்னையாளுடையவன்று யிலராவமளியும்
இலகுபொற் கோயிலும் இந்துவின் பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித் துறையும் அக் காவிரித் துறையுமே."

பிள்ளைப் பெருமாள் உயர்ந்த கவியில்லை. யமகம் சிலேடை முதலிய சொற் சிலம்பு பழகுவதில் சாமர்த்திய முடையவர். சம்பிராதயக் கவிப்பாலை வனத்தில் ஆங்காங்கு உண்மைக் கவியோட்டத்தின் மர்மரா சப்தங் கேட்கும். சில மலர்கள் மலர்ந்து 'கம்' என்று வாசனை வீசும். இப்படிப் பூத்தடிக்கிற மலர்களில் மேற்குறித்த பாடலொன்று.

உயர்ந்த கருத்தையும், உயர்ந்த உணர்ச்சியையும் கற்பனை உலையில் வைத்தூதி, அவைகளை யுருக்கி, அழகான ஓர் உருவத்தை இந்தப் பாட்டில் அமைத்திருக்கிறார் கவி. இப் பாட்டைப் படிக்குந்தோறும், புதிய புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன; துவனிகர்ப்பமாயிருக்கிறது இந்தப் பாட்டு.

"இங்கு நிற்க நிலையில்லை; அங்கு அநேக சித்திரங்களமைந்த ஒரு பொன்

(111-ம் பக்கம் பார்க்க)




# சிக்கனம்

(ராவ் சாகேப் கே. சுப்பிரமணியம்)

“ தாத்தா ! இன்டஸ்ட்ரியல் ஸ்கூல்கள் என்று சர்க்காரும் சில டிஸ்ட்ரிக்டு போர்டுகளும், சிலபாதிரிமார்களும் வைத்திருக்கிறார்களே, அங்கே பையன்களை அனுப்பலாமோ ?”

“ அங்கே அனுப்புகிறதிலே கூட ரொம்ப லாபமில்லை. ஏன் என்று கேட்கிறாயோ? அந்தப் பள்ளிக்கூடங்களில் அநேகமாகத் தச்சவேலையும் நெசவும் செய்கிறார்கள். கொஞ்ச இடத்திலே இரும்புவேலை. சில இடத்திலே பிரம்பு, தோல், சாயம் இவைகள் நடக்கிறதாம். நாற்காலி, மேஜை முதலிய நாகரீக வஸ்துக்கள் புதுப்புதுமாதிரி செய்கிறார்களாம். ரங்கூன் தேக்கிலேதான் அதிகமாக வேலை செய்கிறார்களாம். அதெல்லாம் நமக்குத்தேவையில்லை. சுற்றுப்புறக்கிராமங்களிலெல்லாம் எண்ணினால் கூட 10 நாற்காலி அகப்படாது. நாடகத்திலே ராஜா உட்காருகிறதற்கு ஒரு உரலைக் கொண்டுவந்து போடுவதுண்டு. அந்த (furniture) பர்னிசர்தான் செய்கிறார்களே, மரம் எங்கேயிருந்து மலிவா கிடைக்கும், விலைவாசி என்ன, எப்படி சதுரிக்கிறார்கள், ஸீஸன் செய்கிறது எப்படி ? என்ன என்ன விலைக்கு விற்கலாம் என்பது முதல் எவ்வளவு, சாமான்கள் தேய்வு நஷ்டம், வட்டி இடவாடகை வரிகள்—முதலிய கேள்விகளை எல்லாம் ஆராய்கிறதில்லை. வியாபாரதோரணைகளைத் தெரிந்து கொள்கிறதில்லை. அளவுக்குத் தகுந்த துண்டுகள் இழைத்து சேர்க்க வேண்டியது தான் அங்கே வேலை. அங்கு உபயோகப்படுகிற ஆயுதங்களோ எல்லாம் வெளிநாட்டுச் சாமான்கள். மீன் மார்க்கு உளி, ஸ்டான்லி இழைப்புளி, லண்டன் ஸான்டு பேபர், அமெரிக்கன் அல்லது ஜெர்மன் ‘டூல்ஸ்,’ இங்கிலீஷ் வார்னிஷ், முதலியவைகளை உபயோகிக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களால் நம் தொழிலுக்கு வளர்ச்சியா, அயல் நாட்டுத்தொழிலுக்கு வளர்ச்சியா என்றுதான் தெரியவில்லை.

“ அயல்நாட்டு உளியையும் சாமான்களையும் கொண்டு வேலை கற்றுக்கொண்ட ஒருவனிடம் கருகட்டையைப் போட்டுக் ஒரு கலப்பை செய் என்றால் பேந்தப் பேந்த விழிக்கிறான். அல்லது நல்ல விலைகொடுத்து வாங்கின சீமை உளியை ஒடித்துக் கொண்டுபோய் விடுவான். இயந்திரத்துக்கு அச்சுப் போடுகிறதென்றால் கூட அவனுக்குக் கஷ்டம்தான். அயல் நாட்டினர் வண்டி சக்கரம் எங்கே பண்ணுகிறார்கள் ? நீயே நன்றாகக் கவனித்துப்பார். இதே மாதிரிதான் நெசவிலேயும். நம் தேசத்திலேயே வேண்டியதற்குமேலே நெசவுக்காரர்களிருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்தப் பள்ளிக்கூடத்திலே கற்றுக்கொடுக்கிறதோ சுலபமாக நம் வீடுகளில் செய்துகொள்ளக்கூடிய ரீதியில் இல்லை. கைத்தறி வேலைக்குவேண்டிய உபகரணங்களே இங்கே அஸாத்தியம். கஞ்சி போடுகிறது சுலபமாயில்லை. வீட்டுத்தறிக்கு தகுந்ததல்ல என்றே சொல்லலாம். நூற்கிற விஷயமே இல்லை. அங்கே தறிகளும் விலை ஜாஸ்தி. ஷட்டில்கள் (shuttles) நூல் உண்டைக் குச்சிகள் விலை அதிகம். பாவு கஞ்சி போடுகிறதென்றால்கூட ரொம்பநேரம் ஆகும். இந்த அவஸ்தைகளில்லாமல் முறுக்கு நூலில் வேலை கற்

றுக் கொடுக்கிறுர்கள். அதிலேயே பையன் களுக்கும் அப்பியாசம். வீட்டுக்குவந்தால் ஒற்றை நூல் நெசவு செய்யத்தெரிகிற தில்லே. முறுக்கு நூலில் செய்தால் விலே அதிகம். விற்பனே கஷ்டம். இதிலேயும் முன்னே சொன்னமாதிரி கணக்கு வழக் குத் தெரியாது. உள்ளூரில் கிராமத்து சாலியன், பட்டுநூல்காரன் செய்கிற மாதிரி சுலபமாகச் செய்யமுடிகிறதில்லே. இவர்கள் கற்றுக்கொண்டமாதிரி பண்ண வேண்டுமென்றுல், முதல் ரொம்ப ஜாஸ்தி யாக வேண்டும். வேறு அவஸ்தைகளும் ஜாஸ்தி. பழைய நெசவுக்காரன் வழியே மேலென்று தோன்றுகிறது. கிட்டத் தட்ட இந்த மாதிரிதான் மற்ற விஷயங் களுமிருக்கும் என்று நினேக்கிறேன்."

"சரியாப்போச்சு! நீங்கள் எல்லாவற் றிற்கும் குறுக்குச் சொல்லுகிறீர்களே. ஒரு வழியும் போகவிடவில்லேயே? பின்னே என்னதான் பண்ணுகிறது?"

"குழந்தைகள் இந்த புதுமாதிரிப் படி ப்பு வருகிறவரைக்கும் ஊரிலேயே எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளட்டும். வயல் வாய்க் காலேப் பார்க்கட்டும். எருமையையும் பசு வையும் நன்ருக மேய்த்து பராமறிக்கட் டும். தோட்டத்திலே, செடிகளே வைத்து வளர்க்கச் சொல், இலே தைக்கச் சொல். நூல் நூற்கச்சொல். ஊரிலே இருக்கிற சாலியன் கொல்லன் தச்சனிடம் கொஞ்ச வேலே கற்றுக்கொள்ளட்டும். வயலில் உழச் சொல். ஆளோடு ஆளாய் எந்த சமயத்தில் என்னென்ன விதை எங்கெந்த வயலில் போடுகிறுர்கள் என்ற விவரங்களேக் கற் றுக்கொள்ளச்சொல். எரு எப்படி போடு கிறது? விதை எவ்வளவு? இந்தமாதிரி யெல்லாம் கற்றுக்கொண்டால் லாபம் உண்டு. வியவசாய டிபார்ட்மெண்டுகாரர் கள்கூட உபகாரம் செய்வார்கள். அவர் கள் நம் ஊருக்குக்கூட வந்துபோய்க் கொண்டிருக்கிறுர்களே."

"நன்ருகச் சொன்னீர்கள். அந்த டிபார்ட்மெண்டுக்காரர்கள் சொல்கிற படி செய்ய நம்மாலே முடியுமா? அவர் கள் இரும்புக்கலப்பை என்கிறுர்கள். ஆழ மாகவும் அகலமாகவும் நடுப்புடைகளுமில் லாமல் உழ இது நல்லதுதான். அந்த இரும்புக் கலப்பையும் அதற்குத் தகுந்த மாடும் வாங்க நம்மாலே முடிகிறதா? வாங் கினுலும் நமக்கு இருக்கிற சொல்ப பூமி யில் எத்தனே நாள் வேலே அவைகளுக்கு இருக்கும்? ஜாஸ்தியாய்ப்போனுல்கூட இரண்டு மாசங்கள்தானே? மற்ற நாட் களிலே துருப்பிடிக்கும். பெரிய மாடுகளுக் குத் தீனி ஜாஸ்திசெலவு நஷ்டமானுலும் ரொம்ப நஷ்டம். உடனே விற்றுவிடலா மென்று பார்த்தாலோ உழவுக்காலமான பிறகு பாதிவிலே கிடைக்காது. வைத்துக் காப்பாற்ற நமக்குக் கட்டுகிறதில்லே. வயல் களுக்கு சீமை எருவு ஸுபர்பாஸ்பெட் (superphosphate) மீன் எருவு, எலும்புத் தூள் (nitrates) நைட்ரேட்டுகள் என்னன் னமோ போடவேணும் என்கிறுர்கள். நம் நிலங்களோ சேர்ந்தாற்போல் இல்லே. திக்குக்கொன்று. இங்கே $\frac{1}{4}$ ஏகரா கிழக்கே $\frac{1}{2}$ ஏகரா, மேற்கே முக்கால் இப்படி யிருக் கின்றன. இந்த எருக்களேப்போட்டு தண் ணீர்விட்டு விட்டால் அடுத்தவன் வயலி லேயோ, வாய்க்காலிலேயோ, வடி கால் தண்ணீரோடு போகிறது. பூரண பலன் கொடுக்கிறதில்லே. சேர்ந்தாற் போலே யிருந்தால் மேலாயிருக்கும். அவர் கள் சொல்லுகிறதும் நன்ருய்த்தானி ருக்கிறது. நமக்குமட்டும் கிரகசாரம் சரியாயில்லே. ஆனுல் அந்த விவசாய டிபார்ட்மெண்டுக்காரர்கள் அங்கங்கே நம்மைப்போல வயல்கள் வைத்துக் கொண்டு பயிர் பச்சை செய்து லாபம், காண்பித்தால் எல்லாரும் செய்யலாம்.

"இப்போது அவர்கள் பண்ணேயில் பார் த்தால் அசாத்தியச் செலவாயிருக்கும்போ லிருக்கிறது. நமக்கு எல்லாம் அம்மாதிரி செய்யமுடியாது என்று தோன்றுகிறது. அவர்கள் பயிர் நன்ருகத்தானிருக்கிறது. அந்தமாதிரி நமக்கு சேர்ந்தாற்போல் நில பலமும் இல்லே; அப்படிசெய்ய சக்தியு மில்லே; வசதியும் கிடையாது. அவர்கள் என்னமோ, அப்படிப் பண்ணவேணும், இப்படிச் செய்யவேணும் என்றுசொல்லு கிறுர்கள். சுலபமாகச் செய்து காண்பிப் பதைக்காணேம்."

"எண்டா! நான்தான் ஒருவன் கோணச் சொல் சொல்லுகிறவன் என்று இந்த ஊரில் பேர் வாங்கினேன். நீங்களும் மெள்ள மெள்ள என்பக்கம் ஆரம்பிக்கிறீர்களே?"

"பின்னே என்ன? இருக்கிறதைச் சொன்னேன். இது போகட்டும். மேலே சொல்லுங்கோ இன்னும் என்னசெலவைக் குறைக்கலாமென்று".

"இதுவரையில் என்னென்ன செலவுகள் குறைக்கச் சொன்னேன் அதைச் சொல்லேன்."

"(1) உலோகப் பாத்திரங்களுக்குப் பதிலாக இனிமேல் குறைந்த விலையில் மண் பாண்டங்கள் (2) நம் பருத்தியை நாமே நூற்றுத் துணிபண்ணிக் கொள்கிறது. (3) நம் வயலிலே விளைந்த மல்லாக் கொட்டை, ஆமணக்கு எண்ணெயை உபயோகிக்கிறது. (4) விறகுக்குப் பதிலாக அந்தத் தோலியை கூடியவரையில் உபயோகிக்கிறது. பிண்ணாக்குப் பருத்திக் கொட்டையை, மாட்டுக்கு வயலுக்குப் போடுகிறது. (6) பிஸ்கோத்து ஸோப் வாங்கவேண்டியதில்லை. அரப்பு சீயக் காய்ப்பொடி உபயோகப்படுத்துகிறது. (7) கோர்ட்டுக்குப் போகக்கூடாது. எல்லாம் நம் உள்ளூர் பஞ்சாயத்திலேயே நடக்கவேணும். அதற்கு நாமெல்லோரும் கட்டுப்படவேணும். கட்டுப்படாதவனை நம்மோடு சேர்க்கிறதில்லை என்கிற வழக்கம் வந்து விடவேணும். (8) குழந்தைகளுக்கு உபயோகமாகிற படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடுசெய்யவேணும். (9)நமக்குத் தகுந்த மாதிரி நமக்கு வேண்டிய பொருள்களைச்செய்து கொள்ளவேண்டும். வீண் செலவும் இல்லாமல் ஆடம்பரமாய் போகாமல் இருக்கவேண்டும். (10) பசங்களை நன்றாக மாடு மேய்க்கச் சொல்கிறது. பெண்களை இலை, தொன்னை தைக்கச் சொல்கிறது. இதெல்லாம் சொன்னீர்கள். இன்னும்?"

"இன்னும் என்ன இருக்கிறது? நாம் ஜாஸ்தியாக செலவழிக்கிறது கூடாது. கலியாணம் கார்த்திகை இப்போது அவ்வளவு தடபுடலாயில்லை. செலவு ரொம்ப குறுகிப்போயிற்று. கோவிலில் கலியாணம் ஒரு நாளில் ஆகிவிடுகிறது. கட்டுச்சாதம் விருந்து காலமே ஆகிவிடுகிறது. ஆனால் சில டம்பக்காரர்கள் பாட்டுக் கச்சேரி மேளம், தாளம் என்று கூத்தாடுகிறார்கள். எல்லாம் குறைந்து போகும் கொஞ்ச நாளிலே. காப்பிப் பழக்கம் ஒன்று வந்து நம்மைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு விட்டதல்லவா? அதையும் ஒழித்துவிடவேண்டும். செலவும் ஜாஸ்தி; உடம்புக்கும் கெடுதல். இந்த மாதிரி அனுவசியமான விஷயங்களைப் பார்த்து ஒதுக்கவேண்டும். கூடுமானவரையில் செலவை ஒடுக்கவேண்டும். இளநீரை காலணா விற்றுவிட்டு, ஆரஞ்சு கிரஷ் ஒரு அணாவுக்கு ஏன் வாங்கவேணும்? எல்லாம் யோசித்துப்பார்."

---

(108-ம் பக்கத் தொடர்ச்சி)

கோயில். இங்கே யொரு தாபம்; அங்கு நீரும் நிழலும். இங்குக் கால அலைகளில் மொத்துண்டு ஓயாத அலேப்பு, அங்கு காலக் கடலைப் பரிகசிக்கும் நீண்ட மலைகள் போல் மதில்கள். இங்கு ஓலமும், கூச்சலும்; அங்கு நல்லிசையாழின் கானம். இங்கு உள்ளம் சாம்புகிற வாழ்வுப் பாலைவனம்; அங்கு உள்ளங் தழைத்தோங்கும் பசுமைமாறாத புற்தடம்." இப்படி எண்ணங்களைத் தூண்டுகின்ற இந்தப் பாட்டு ஒரு தெய்வீக வேளையில்தான் சுரந்து நாம் பருக வழிந்திருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஊற்றுப் போல உள்ளத்தில் சுரப்பதுதான் உண்மைக் கவி; மற்றவைகள் மனிதனின் புத்தி சாமர்த்தியத்தைக் காட்டுமேயொழிய, தெய்வக் கவிதையின் முத்திரை பெற்று விளங்கா.

---

# அன்பின் வெள்ளம்

"வஸந்தன்"

ஸ்ரீமதி செல்லம்மாள் அந்த வீட்டில் ஏகசக்ராதிபதியாக விளங்கினள். ஏனென்றால் அவள் மாமியார், மாமியார் ஆவதற்கு முன்பாகவே அவளுக்குப் பூரண அதிகாரம் உண்டு. வீட்டை விற்கவோ, நிலத்தை வாங்கவோ அவளுக்குப் பூரண சுதந்திரம் உண்டு. அந்த அதிகாரத்தில் யாராவது தலையிட்டால் அவள் பதவியை ராஜினமா செய்துவிடுவாள் என்ற பிரச்னே கிடையாது. ஒருவரும் தலையிடமுடியாது. தலையிடுவது என்ற விஷயம் ஒன்று உண்டானல் இவள்தான் பிறத்தியார் விஷயங்களில் தலையிடுவாள்.

உதாரணமாக அடுத்த வீட்டில் ஏதாவது ரகளை உண்டானல் மத்தியஸ்தம் செய்ய செல்லம்மாளைக் கூப்பிடுவார்கள். அவளது கணீரென்ற குரலும், தீர்மானமான பேச்சுக்களும், எந்த யுத்தத்தையும் அடக்கிவிடும். அவளது உருவத்தில்கூட ஒரு 'அதிகாரத்தன்மையின்' சாயல் இருந்தது.

மொத்தத்தில் செல்லம்மாள் அந்தத் தெருவில் பிரபலமாயிருந்தாள். எவ்வளவு பிரபலமா யிருந்தாளென்றால், "இவர்தான் செல்லம்மாள் அகத்துக்காரர்" என்று கங்காதரய்யரை எல்லோரும் கூப்பிடும் அளவுக்கு. கங்காதரய்யர், தன் பெயரை அமுலுக்குக் கொண்டுவர எவ்வளவோ முயன்றார். ஆனல் 'செல்லம்மாள் அகத்துக்காரர்' என்ற பெயர் நிலைபெற்றுவிட்டது. பிரும்மாவால்கூட அதை மாற்ற முடியாது.

இவ்வளவு பிரபலமாயிருந்த செல்லம்மாள் மாமியாராக ஆனதும் அவளது ஆதிபத்தியம் இன்னும் கொஞ்சம் பெருகியதை உணர்ந்தாள். அந்த உணர்ச்சி அவளுக்குப் புளகாங்கிதத்தைக் கொடுத்தது. புருஷனும், பிள்ளையும் அவள் பேச்சை மீறுவது கிடையாது. மாட்டுப் பெண் சாதுவாகச் சமத்தாக இருக்கிறாள். இவள் அழகைப் பார்த்துவிட்டு "உன் மாட்டுப் பெண்ணு? நீ பாக்கியம் செய்தவளடி" என்று எல்லோரும் பொருமைப் படுகிறார்கள். இதைவிட என்ன கௌரவம் வேண்டும் அவளுக்கு? அவள் மாமியார் ஆவதற்குமுன்—அல்லது மாமியார் ஆகும்போது என்றாலும் சரி—நடந்த அந்த முக்கிய சம்பவம் அவள் கர்வத்தை பன்மடங்கு தூண்டிவிடும்.

* * *

சிவசாம்புவும் அவன் தாயார் செல்லம்மாளும் கட்டைவண்டியில் மகிழஞ்சேரிக்குப் பிரயாணமானர்கள். கட்டைவண்டியில் அந்த மணல் ரோட்டில் பிரயாணம் செய்தது மறக்கமுடியாத அனுபவத்தைக் கொடுத்தது. ரோட்டிலுள்ள மேடு பள்ளங்களில் வண்டிபோகும்போது மடார் என்றுவண்டிக்கூட்டுடன்மண்டைமோதிக் கொள்ளும். வண்டி பள்ளத்திலிருந்து எழுந்திருக்கும்போது அவர்கள் குடலைத் தூக்கிப்போடும். "நல்ல ரோடு! சனியன் பிடித்த ரோடு! இந்தப் பக்கத்திலே கட்டையிலே போறவன் மோட்டார் விடப்படாதோ?" என்றாள் செல்லம்மாள்.

"ரோட்டு சரியா யிருந்தால்தானே அம்மா, மோட்டார் விடுவான்" என்று பதில் சொன்னன் சிவசாம்பு.

"அதான் சொல்றேன். ரோட்டில் கப்பியைப் போடறத்துக் கென்ன என்று. நாசமாய்ப்போக சர்க்கார்காரன்."

"சர்க்காரை வையாதே அம்மா. இந்த காரியத்துக்கும் சர்க்காருக்கும் சம்பந்தமில்லை. ஜில்லா போர்டுன்னு ஒன்று இருக்கு. அதுதான் போடணும்."

"ஜில்லா போடு மேலே கல்லைத்தூக்கி போடு" என்று செல்லம்மாள் கோபித்துக் கொண்டாள்.

உண்மையில் இந்த பிரயாண உபத்திரவம் ஒன்றும் சிவசாம்புவுக்குத் தோன்றவில்லை. அவன் மனம் எதிர்காலத்தை நோக்கிச் சிந்தித்து நிகழ்காலத்தை மறந்தது. "இதோ இன்னும் கொஞ்ச நேரத்

தில் மகிழஞ்சேரியில் இருக்கப் போகிறோம். ஆசார உபசாரம் நடக்கும். பெண் வந்து இடுக்கு வழியாகப்பார்ப்பாள். அதற்குப்பிறகு நமஸ்காரம் பண்ணச் சொல்லுவார்கள். அவள், கோணிக் குறுகி அன்ன நடை நடந்து வருவாள். நமஸ்காரம் பண்ணித் திரும்பும்போது கடைக்கண்ணால் பார்ப்பாள். ஆஹா அது என்ன பார்வை! என்ன பார்வை!"

இப்படியெல்லாம் நினைத்து சிவசாம்பு புளகாங்கிதம் அடைந்தான். மற்றொரு நினைப்பு உடனே குறுக்கிட்டது. "அந்தப் பெண் எப்படி இருப்பாளோ. கன்னங் கருக்க பிரம்மஹத்தி மாதிரி இருக்குமோ? ஐயோ! அம்மாவுக்கு எப்போதும் பிடிவாதம் ஜாஸ்தியாச்சே! அதைக் கலியாணம் பண்ணிக்கொள் என்றால் வேறு வழி? இருக்கட்டும், அவள் பெயர் என்ன? மீனா... ஹூம். மீனாவாம்...ஐயைய!"

"ஏண்டா! பித்துப் பிடிச்சாப்பலே உக்கார்ந்திண்டிருக்கே. இறங்கு கீழே" என்று கட்டளையிட்டாள் செல்லம்மாள். இருவரும் இறங்கி வீட்டுக்குள் போனார்கள்.

பெண்ணைப் பார்த்துவிட்டு உடனே ஊருக்குத் திரும்பிவந்து விட்டார்கள். "ஏண்டா, பெண் எப்படியிருக்காள் தேவலையா?" என்று அம்மாள் கேட்டாள்.

இந்த மாதிரி அம்மாள் கேட்பாள் என்று எதிர்பார்த்தான் சிவசாம்பு. தான் தயாராக வைத்திருந்த பதிலை வெளியிட்டான்.

"அம்மா! எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை....பேரே எனக்கு முதலில் பிடிக்கவில்லை...எனக்கு என்னமோ......" என்று இழுத்தான்.

சிவசாம்புக்கு தாயார் குணம் தெரியும். பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசையால் துடித்ததால் தான் அதை அவன் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. "சரி! கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறேன்" என்று அவன் சொன்னால் அவளுக்குக் குரங்கு புத்தி வந்து "கூடாது இதோ பார்க்கிறேன் வேறு பெண்ணை!" என்று ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது? அப்படியில்லாமல் "மாட்டேன்" என்று சொன்னால் "மாட்டியா? நான் சொல்லுகிறேன் கலியாணம் பண்ணிக்கொள்ளச் சொல்ல, நீ வேண்டாமென்கிறாயா?" என்று தன் அதிகாரத்தைச் செலுத்துவாள். ஆ! அதுதான்சரி, மாட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். இப்படி யோசித்த பிறகு தான் சிவசாம்பு பதில்கொடுத்தான்.

"ஏண்டா? அவளுக்கென்ன? செக்கச் செவக்க ராஜாத்தி மாதிரி......" என்று தாயார் ஆரம்பித்ததும் சிவசாம்புக்கு உயிர் வந்தது. கால்மணிநேரம் பிரசங்கம் செய்துவிட்டு கடைசியில் "வர வைகாசியில் கல்யாணம் நடத்திவிட வேண்டும்" என்று உத்திரவு போட்டாள். எப்போது உத்திரவு பிறந்ததோ அப்போது என்ன நடந்திருக்கும் என்று சொல்லவேண்டியதில்லை.

* * *

தான் நிச்சயம் பண்ணின பெண்தானே என்று நினைக்கும்போதுதான் மீனாவை ஓர் மரப்பாச்சி என்று எண்ணினாள் செல்லம்மாள். மீனா தன் மாமியாரின் சக்தியை நன்றாக அறிந்திருந்தாள். இந்த வீட்டில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்றால் மாமியாரைத் திருப்தி செய்விக்கவேண்டுமென்பதை உணர்ந்தாள். அந்த லட்சியத்தை அடைவதற்காக எவ்வளவோ சிரமப்பட்டாள். ஆனால் அது கடைசியில் லட்சியமாகவே ஆயிற்று.

மீனாள் மாமியாரின் குறிப்பை யறிந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்வாள். அதைப் பார்த்துவிட்டு சில சமயங்களில் செல்லம்மாளுக்கு குதூகலம் உண்டாகும். அந்தக் குதூகலத்தை கெர்வம் என்ற ஆடையால் மறைத்துக்கொள்வாள். "நன்றாகக் காரியம் செய்கிறாள்" என்று யாராவது சொன்னால் "அப்படியில்லாவிட்டால் இந்த வீட்டில் அவளுக்கு என்ன வேலை?" என்றுகேட்பாள். ஆனால் அடிக்கடி பலர் இப்படி மாட்டுப்பெண்ணுக்கு சர்ட்டிபிகேட் கொடுப்பது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இதனால் மீனாளுக்கு ராங்கி வந்துவிடும்; எப்போது ராங்கி வந்துவிட்டதோ அப்போது வீடு குட்டிச்சுவர்தான் என்பது அவளது

தீர்மானமான அபிப்பிராயம். ஆகையால் மாட்டுப் பெண்ணைப்பற்றி யாராவது பேச்சு எடுத்தால் அவளுக்குப் பிடிக்காது. "சரி! சரி! அவள் காரியம் செய்யறது எனக்கல்லவா தெரியும்" என்று சொல்ல ஆரம்பித்தாள்.

சிவசாம்பு தன் அகமுடையாளைப் பார்த்து சந்தோஷப்பட்டான். அவள் தன் தாயாரிடம்கூட நல்ல பெயர் வாங்கிவிட்டாள் என்று எண்ணியபோது அவனுக்கு நிம்மதி உண்டாயிற்று. ஆனால் தாயாரின் குணத்தை நன்றாக அறிவானதலால் அந்த நிம்மதியின் உண்மையை அறிய ஆவல்கொள்ளவில்லை. நிம்மதியின் நிழல் தற்போது இருந்தால்கூடப் போதும்; அதில் தங்கி இன்பமடையலாம். எனவே தாயாரைப்பற்றி மனைவியிடமோ, மனைவியைப்பற்றி தாயாரிடமோ பேசமாட்டான்.

மீனு வாய் திறவாமல் மௌனப்பெண்ணாய் குடித்தனம் செய்தாள். அகமுடையான் உணர்ச்சிகளை அறியும்போது சந்தோஷப்பட்டாள். இந்த சந்தோஷந்தான் மாமியார் குற்றம் சொன்ன வேளைகளில் அவள் அடைந்த துன்பத்தையும் மறக்கச் செய்தது. இப்படியாக அவள் குடித்தனம் செய்தபோதுதான் ஒரு முக்கிய சம்பவமும் நடந்தது. மீனுள் நல்ல பெண்ணாயிருந்தபோதிலும் ஒரே ஒரு குறை இருந்தது. அதாவது அவளுக்கு மறதி ஜாஸ்தி. சில சமயங்களில் காரியத்தை மறந்துவிடுவாள். அப்போது செல்லம்மாள் "அதை இன்னமுமா செய்யவில்லை? அதென்ன மறதி அப்படி ஒரு பெண்ணுக்கு?" என்பாள். சில நாளைக்கெல்லாம் "வந்து விட்டதா அகம்பாவம்! தெரியுமே எனக்கு?" என்று மாமியார் பேச்சு மாறிற்று. "அகமுடையானைக் கைக்குள்ளே போட்டு கொண்டு விட்டதாய் நினைக்கிறாயோ? நான் உசுரோடே இருக்கிறவரையில் நான் சொன்னதைத்தான் கேட்கணும் தெரியுமா?" என்றாள் செல்லம்மாள் ஒரு நாள்.

மீனு ஒன்றுக்குமே பதில் சொல்லவில்லை. ஆனால் அன்றைக்கு நாள் முழுதும் வேலைசெய்து அலுத்துக் களைத்துப் போயிருந்தாள். பலவீனமான நரம்புகளால் மாமியார் வார்த்தையின் அதிர்ச்சியை தாங்க முடியவில்லை.

"நீங்கள் சொல்வதை நான் கேட்கவில்லையா, அம்மா? எதற்காக இப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று மீனு கேட்டாள்.

உண்மையில் மீனு மாமியார் பேரில் பயமும் பக்தியும் கொண்டிருந்தாளானலும் அவள் எப்போது பார்த்தாலும் குறைபட்டுக் கொண்டிருந்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. மேலும் மீனு இரண்டொரு விஷயங்களில் மாமியார் காரியங்களை வெறுத்தாள். உதாரணமாக, தன் வீட்டு சமாசாரங்களைப் பிறரிடம் முழங்கும் வழக்கம் செல்லம்மாளுக்கு உண்டு. இது மீனுவுக்குப் பிடிக்காது. இருந்தபோதிலும் மீனுள் தன் வெறுப்பைக் காட்டிக் கொள்ளாமல் அடக்கமாயிருந்து விடுவது வழக்கம். ஆனால் அன்றைக்கு மாமியாருக்கு தான் பதில் சொன்னது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது.

"என்ன! நான் சொல்லுகிறதைச் செய்கிறாயா!......... என்ன? பேஷ்! ரொம்ப அழகாகச் செய்யறியே.......உம்! .........வாயைப்பாரு வாயை. வாய்தான் பாக்கியிருந்தது. அதுவும் வந்துவிட்டதா? தெரியுமே! மகிழஞ்சேரி வகையறு அப்போவே வேண்டாம்னு தலையை அடிச்சுண்டா. நான்தான் புத்திகெட்டுப் போய் பண்ணினேன்...........உனக்கு இவ்வளவு தைரியமா?"

"ஏம்மா கோவிச்சுக்கறேள்?" என்று ஆரம்பித்தாள் மீனு.

"சீ! வாய் பேசாதே. பெரிய மனுஷியாட்டமா சமாதானம் பண்றாள்! இப்போதே ஊரிலே கொண்டுபோய் விடச் சொல்றேன்."

"ஊரில் கொண்டுபோய் விடறதுக்கா கலியாணம் பண்ணினேள்?" என்று கோபத்தில் கேட்டுவிட்டாள் அந்த அசட்டுப்பெண்.

மாமியாருக்குக் கோபம் தாங்கவில்லை. அவள் உடம்பு கோபத்தால் நடுங்கிற்று. அந்த சமயத்தில் மீனுவை என்னசெய்யப் போகிறாள் என்று பார்ப்பதற்கு வந்தவன்போல் சிவசாம்பு உள்ளே வந்தான்.

" என்ன சண்டை?" என்று கேட்டான் பிள்ளையாண்டான்.

" அப்பா! உன் பொண்டாட்டியை வைச்சுண்டு நீ குடித்தனம் பண்ணு. நான் வெளியே போகிறேனப்பா. இனிமேல் இங்கே எனக்கு வேலை இல்லை......" என்று ஆரம்பித்தாள் தாயார்.

" ஆமாம், உனக்கு இதுதான் வேலை" என்றான் சிவசாம்பு.

"என்ன ?" என்றாள் செல்லம்மாள்.

" அவளுக்கு இதுதான் வேலை " என்று சமாளித்துக் கொண்டான்.

" சனியன்! சரியாகக் காரியம் செய்கிற தில்லை. எப்பப் பாத்தாலும் அழுகை தான். உன்னைக் கோவிச்சுண்டால் மோச மாக்கும்? அழுகையைப்பாரு, மாமாலம்! உன்னை ஒழிச்சுப்பிட்டு மறுகாரியம் பார்க் கிறேன் பார்" என்று கோபமாய் மீனுவைப் பார்த்துச் சொல்லிவிட்டு அடுத்த அறைக் குள் பூனைபோல் நுழைந்தான்.

" ஆமாண்டாப்பா! 'கோவிச்சுக்கிறாப் போலே கோவிச்சுக்கறேன்; அழறாப் போலே அழு, என்று அகமுடையாள் கிட்ட சொல்லி வச்சிருக்கி யாக்கும்?" என்று சொல்லிவிட்டு 'பல ஹாரம்' பண் ணப் போனாள் செல்லம்மாள்.

* * *

" ஊருக்குக் கொண்டுபோய் விடத்தான் கலியாணம் பண்ணீர்களாக்கும்?" என்று மீனு கேட்டாளல்லவா? அதற்கு ஒருவாரத் திற்கெல்லாம் அவள் ஊருக்குப் போகும் படி ஏற்பட்டது. மீனுவின் தகப்பனார் சம்பந்தி வீட்டுக்கு ஒரு நாள் வந்தார். மீனுவின் தாயாருக்கு உடம்பு சரியாயில்லை என்றும் பெண்ணை தாயார் பார்க்க வேண்டுமென்று ஆசைப் படுவதாகவும் சொன்னார். முதலில் மாட்டுப் பெண்ணை அழைத்துக் கொண்டு போகக்கூடாது என்று சொன்னாள் செல்லம்மாள். ஆனால் சிவசாம்பு " மீனு இங்கேதான் இருக்க வேண்டும் " என்று பிடிவாதம் செய்த தும் செல்லம்மாள் கடைசியாக அவளை தகப்பனார் அழைத்துக் கொண்டுபோகச் சம்மதித்தாள்.

உண்மையில் சிவசாம்புவுக்கு அவள் ஊருக்குப் போவதில் சந்தோஷம்தான். மாமியாரிடம் குட்டுப்படாதபடி 'ஹாய் யாக' ஒரு மாதம் கழித்து வரலாம். மேலும் இந்தப் பட்டணத்தில் இருந்து கொண்டு உடம்பு தேய்வதைவிட கிராமத் தில் சில நாட்கள் தங்கினால் சௌகர்யம் உண்டு. வரும்போது மீனு தேக திட மாய் இருப்பாள். வந்து மாமியாருக்குச் சுசுரூஷை செய்ய பலம் வேண்டுமல்லவா?

* * *

மீனு ஊருக்குப் போய் ஒரு வாரமா யிற்று. வீடு 'வெரிச்'சென்றிருந்தது. செல் லம்மாளுக்கு வேலை ஓடவில்லை.

அவள் மனம் அமைதி யிழந்து இருந் தது. மீனுவின் அடக்கமான பேச்சும், சோகம் ததும்பும் கண்களும், சாந்த முக மும், 'கலகல' என்ற மெட்டுச் சத்தமும் அவள் ஞாபகத்துக்கு வந்து வேதனை யைக் கொடுத்தன.

சிவசாம்பு தாயாரிடம் மீனுவைப்பற்றிய பேச்சு எடுக்கவில்லை. எடுத்தால் என்ன ஆகுமென்பதை அறிந்திருந்தான்.

ஒரு நாள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, செல்லம்மாள் சிவசாம்புவைப் பார்த்து "ஏண்டாப்பா, குழந்தை ஊருக் குப்போய் பத்து நாளாச்சே. ஏன் தபாலே எழுத வில்லை?" என்று கேட்டாள். குழந்தை என்றதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

" குழந்தையாம்! உனக்குத்தான் அவ ளைக் கண்டால் பிடிக்காதே. குற்றம் சொல்ல வீட்டில் ஆளில்லை என்று பார்க்கி றாயோ?" என்று கேட்க நினைத்தவனாகி தலைநிமிர்ந்தான்.

ஆனால் தாயார் முகத்திலிருந்து தோன் றிய உணர்ச்சி வெள்ளத்தின் வேகத்தைத் தாளமாட்டாமல் கோரைப் புல் போலத் தலை குனிந்து மௌனியானான்.

ஒற்றையங்க நாடகம்

# அம்மா!

(ஸ்ரீ பே. கோ. சுந்தரராஜன்)

[அஸ்தினபுரத்தில் ஒரு மாளிகை. கர்ணனும் சல்லியனும்]

சல்லியன் :—கர்ணா, உன்னுடைய தர்மமே உன்னைப் பாழாக்கப்போகிறது.

கர்ணன் :—ஊஹூம். தர்மத்திற்குப் பாழாக்கும் குணம் கிடையாது. தவிர நானென்ன பிரமாத தர்மம் செய்து விட்டேன்?

சல் :—கவசகுண்டலங்களைக் கொடுத்த பின் உன் உயிருக்கு விமோசனம் ஏது?

கர் :—கவசத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டிருந்தால் யுத்தம் செய்துதான் என்ன பயன்?

சல் :—உன் வீரத்தைச் சந்தேகிக்கவில்லை. கேட்பது இந்திரன் என்று தெரிந்தும் கொடுத்தாயே. உன்னைக் கொல்ல சபதம் பூண்டிருக்கும் விஜயனுக்கே இப்படி உதவிசெய்தால் உன் கதி என்ன ஆவது?

கர் :—விஜயனும் ஒரு வீரன்தான் என்று நினைக்கிறேன். அவன் மாத்திரம் தற்காப்பு இல்லாமல் யுத்தம் செய்ய முன் வரும்போது நான் எப்படி கவசத்தை அணியலாம்?

சல் :—கொடுத்தபின் இந்த சமாதான மெதற்கு?

கர் :—கொடுப்பதுதானே முக்கியம். சமாதானம் இல்லை. உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டாமா?

சல் :—உன்னிடம் கவசத்தை வாங்குவதற்கு பதில் விஜயன் உயிர்ப்பிச்சை கேட்டிருக்கலாம்.

கர் :—நீ நினைப்பது தவறு. இந்த விஷயம் விஜயனுக்குத் தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் அவன் ஒப்புக்கொண்டிருக்கமாட்டான். அவன் சுத்த வீரன்.

சல் :—அப்படியானால் நீயும் அவன் பக்கம் சேர்ந்துவிடுவதுதானே.

கர் :—சேர்ந்துவிட்டால் எந்த சுத்தவீரனோடு சண்டையிடுவது? வில்வித்தை வீணாகுமே.

சல் :—நல்ல வித்தை! நாளைக்கு யாராவது வந்து வில்வித்தை முழுவதும் தானமாகக்கேட்டால்......?

கர் :—கொடுக்கவேண்டியதுதான். தானத்தைவிட தனுர்வித்தை பெரிதா?

சல் :—ஆனால் ஏன் அது வீணாகுமே என்று கவலைப்படுகிறாய்?

கர் :—அதை ஒருவருக்கும் கொடுக்காத வரையில் கவலைப்பட வேண்டியது தானே. உயிர் இருக்கும் வரைதானே வாழ்க்கைக் கவலை.

சல் :—அதற்காக உயிரை விட்டுவிடுவது தான் முறையோ ... ... ... ?

[ஒரு சேவகன் வருகிறான்]

சே :—மகாராஜா, அம்மை குந்திதேவியார் வந்திருக்கிறார்.

கர் :—சந்தோஷம். உடனே அழைத்து வா.

சல் :—கர்ணா, என்றும் வராத குந்திதேவி இன்றுவரக் காரணம் என்ன? இதில் ஏதோ சூது இருக்கிறது.

கர் :—சரிதான். அபூர்வமாக யாராவது வந்தால் அதில் கூடவா சந்தேகம்?

சல் :—குந்தி அர்ஜுனன் தாயாரென்பது நினைவிருக்கட்டும். இது கண்ணன் கபடமாயிருக்கும்.

கர் :—விஜயன் தாயாயிருந்தாலென்ன? நானும் என் தாயாகவே குந்தியை பாவிக்கிறேன். நீ கவலைப்படவேண்டாம். அதோ வருகிறாள் அம்மை. சரி—சல்லியா நீ போ............

(குந்தி வருகிறாள். சல்லியன் போகிறான்.)

அம்மணீ! என்ன பாக்கியம் செய்தேன் உங்களை வரவேற்க! இங்கே அமருங்கள். அனாதையாகிய என்மீது கருணை கூர்ந்து வந்த காரியம் என்னவோ?

குந்தி :—கர்ணா! உலகம் முழுவதுக்கும் அன்னதாதாவாக விளங்கும் நீயா அனாதை?

கர் :—அப்படி ஒன்றும் பிரமாதமாக நான் செய்துவிடவில்லையே. உங்கள் விஜ

யனைப்போல் தருமமும் வீ ர மு ம் செறிந்த சகோதரர்களை அடைந்திருக் கின்றேனு? அ ல் ல து உங்களைப் போன்ற அன்னையை அறிவேனு?

குந்தி :—உன்னைப்பெற்ற அதிர்ஷ்டசாலி யான அன்னையை நீ இன்னும் அறிய வில்லையே ?

கர் :— அது என் துர்பாக்கியம். அறிந் திருந்தால் இப்படி அனாதையாக இருப் பேனு? என்னைப் பெற்ற அன்னை உடனே உயிர் துறந்தாளோ அல்லது உயிரோடிருந்தும் என் மீது கருணை யில்லையோ - போகட்டும் துர்ப்பாக்கிய சாலியாகிய என்னைப்பற்றி என்ன பேச்சு ? தாங்கள் வந்த காரியம் ?

குந்தி :— அப்பா கர்ணு! நீயா துர்ப்பாக்கி யன் ! உன் அன்னையை உனக்குக் காட் டவே இங்கு வந்தேன்.

கர் :— என் அன்னை ! அம்மணி ! உண் மையா அல்லது சோதிக்கிறீர்களா ?

குந்தி :— இல்லை கர்ணு ! புனிதமான புத் திர வாஞ்சையை சோதிப்பேனு ? உன் அன்னைக்கு உன்னை அறிமுகப் படுத் தவே இங்கு வந்தேன்.

கர் :— ஆ ! எங்கே என் அன்னை ? எங்கே என் அம்மா ! அம்மணி தாம்திக்க வேண்டாம். எங்கே என்னைப் பெற்ற தாய் ?

குந்தி :— உன் அன்னை - உன்னைப் பெற்ற துர்ப்பாக்கியவதி - இதோ - உன்னெதி ரில் ............... என்ன கர்ணு ! பிர மித்து நிற்கிறுய்—நான் தான் உன் தாய் !

கர் :— (அலக்ஷியச்சிரிப்புடன்) அம்மணி, என்மீது இரக்க மில்லையா ? உங்கள் புத்திரர்களுக்குப் பகைவன் என்பதற் காக இப்படியா என்னை வருத்த வேண் டும் ? அம்மணீ ! தாயைப் பார்க்கத் தவிக்கும் என்னை வாட்ட உங்களுக்கு எப்படி மனந் துணிந்தது ?

குந்தி :— கர்ணு, நீயா பகைவன் ? நீ என் புத்திரனல்லவா ? உன்னைப் பெற்ற நான் உன்னை வருத்துவேனு ? நீ தான் என்னுடைய முதல் புதல்வன் கர்ணு !

கர் :— போகட்டும். அந்த ரகசியத்தை இப்பொழுதாவது தெரிவித்தீர்களே, ஏது திடீரென்று முதல் புதல்வன் மீது இது வரையிலில்லாத அன்பு ?

குந்தி :— கர்ணு, உன் அலக்ஷியம் என் நெஞ்சைப் பிளக்கிறது. நான் ஏதோ பயித்தியம் பிடித்தவள் என்று நினைக் கிறுய்; கர்ணு ! என் கண்ணே, எனது புதல்வர்கள் அந்த ஐந்துபேர் மீதிலும் ஆணை! நான்தானப்பா உன்னைப் பெற்ற பாவி.

கர் :— அம்மணி நீங்கள் எல்லோரையும் புத்திரர்களாகப் பாவிப்பது உங்களு டைய இயற்கை. நானும் உங்களை என் அன்னையாகவே நினைக்கிறேன். ஏன் வருந்துகிறீர்கள் ? உ ங் க ளு டை ய அன்பை நான் சந்தேகிக்கவில்லை.

குந்தி :— ஐயோ ! கர்ணு ! உன்னை எப் படி நம்பும்படி செய்வேன் ! அன்று நான் செய்த பாவம் இன்னும் தொடர் கிறதே. கர்ணு, என்னுடைய துர்ப் பாக்கியத்தைச் சொல்லுகிறேன் கேள். நான் கன்னியாயிருந்தபோது பிறந்த குமாரன் அப்பா நீ ! சூரியன் உன் தந்தை. அபவாதத்திற்கஞ்சி உன்னை ஆற்றிலே விட்டு விட்டேன்.

கர் :— அந்தக் கதை எல்லோருக்கும் தெரிந்ததுதானே. என் வளர்ப்புத் தந்தை என்னை ஆற்றிலிருந்து எடுத்து வந்ததை அறியாதவர் யார் ?

குந்தி :— உன்னை ஆற்றில் தள்ளிய பாவி நான் தான். அந்தக் கொடுமைக்காக இதோ உன் நம்பிக்கையைப் பெருமல் தவிக்கிறேன் ஐயோ ! பெற்ற குழந்தை யும் என்னை அறியவில்லையே.

கர் :— அம்மணி, அன்னையின் அன்பை யும் அறியாத நான் எப்படி நம்புவது ?

குந்தி :— உன் அன்னையைத்தேட உனக்கு அக்கரையில்லை. அன்னையின் முகத் தைப் பார்க்க ஆசையா யிருந்தால் தேடித்திரிய மாட்டாயா?

கர் :—வேண்டாம் அம்மணி ! என் நெஞ் சில் கனிந்துகொண்டிருக்கும் உணர்ச் சியைக் கிளறி என்னை வருத்தவேண் டாம். என் அன்னையை அறிய முடி யாத துயரம்தான் என் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. என் அன்னையை ஒரு முறை பார்க்க முடிந்

தாலும் என் உயிரை ஈடாகக் கொடுப்பேனே.

குந்தி :—வருந்தாதே கர்ணா! அன்னையைத் தேட நீ என்ன முயற்சி செய்தாய்?

கர் :—நான் தேடுவதற்குள் — என்னுடைய அனாதை நிலையை அறிந்து ஆயிரக் கணக்கான ஸ்திரீகள் வந்து தாங்களே என் தாய் என்று சொல்லிக் கொண்டார்கள்; அது வெறும் சாக்கு. தானம் பெறவே முக்கியமாக வந்தார்கள்.

குந்தி :—வந்தவர்களில் ஒருவளும் உன்னைப் பெற்றவளல்ல வென்பது நிச்சயமா?

கர் :—சந்தேகமில்லாமல் தெரிந்து கொண்டேன்.

குந் :—ஒரு க்ஷணம்கூட தாயைப் பார்த்து அறிந்திராத உனக்கு எப்படித் தெரிந்தது?

கர் :—நான் என்னைப் பெற்றதாயைப் பார்க்காவிட்டாலும் என்னைப் பாதுகாக்கும் அவருடைய அன்புபோல் ஒரு சோதனைக் கருவி எனக்குக் கிடைத்திருக்கிறது?

குந்தி :—என்னுடைய வார்த்தைகளே அந்தக் கருவி சோதிக்கட்டும்.

கர் :—ஐயோ வேண்டாம். நீங்கள் என்னிடம் காட்டும் அன்புக்கு பதில் துரோகமா செய்வது? பாண்டவர்களுமா பெற்ற தாயை இழக்கவேண்டும்!

குந் :—என்ன கர்ணா, நீசொல்வது விளங்கவில்லையே. பாண்டவர்கள் தாய் இழப்பதா!

கர் :—அம்மணி, என்னிடம் ஒரு சால்வை இருக்கிறது. உண்மையில் என்னைப் பெற்றவள் எவளோ அவளே அதை அணியலாம். மோசம் செய்ய வந்தவர்களில் அநேக ஸ்திரீகள் அதைத் தொட்டதும் எரிந்து சாம்பலாய் விட்டனர்.

குந்தி :—ஆனல் நான் சொல்வதும் வெறும் பொய் என்கிறாயா?

கர் :—வேண்டுமென்று நீங்கள் பொய் சொல்லவில்லை. உங்களுடைய அன்பினால் எனக்கும் பாண்டவர்களுக்குமிருக்கும் பகையைத்தீர்க்க எண்ணுகிறீர்கள்.

குந்தி :—கர்ணா, நான் உன்னைப் பெற்ற உண்மையை நானே இன்றுதான் அறிந்தேன்......எங்கே அந்த சால்வை... ஆ அதோ அப்பீடத்தின் மேல் இருப்பதா? என்னுடைய சத்தியத்தை அது ரூபிக்கட்டும்.

(சால்வையருகில் போகிருள்)

கர்ண :—ஐயோ — அம்மணி — வேண்டாம்—அதைத் தொடவேண்டாம். ஆ...ஐயோ-விஜயா தாயிழந்த உன்னை எப்படி...

(சால்வையை எடுத்துப் போர்த்திக் கொள்கிருள்.)

குந்தி :—பாண்டவர்கள் தாயை இழக்கவில்லை கர்ணா. அன்று நான் உன்னைப் பெற்றேன். இன்று நீ என்னைப் பெற்ருய்!

கர்ண :—என்ன! குந்திதேவி! இன்னுமா அச்சால்வையுடன்......இல்லை... ...இது கண்ணன் மாயம்......இல்லை... ...சால்வை பொய்க்காதே, மோசம்செய்யாதே......ஆம்......ஆம் அம்மணி! அம்மா! அம்மா! அம்மா!!!

(குந்தியின் பாதங்களில் விழுகிருன்)

குந்தி :—(கண்ணீர்ததும்ப, உணர்ச்சி பொங்க அவனை எடுத்து அணைத்து) கண்ணே, என் கர்ணா!

கர்ண :—அம்மா! அம்மா! பாவி அறியாமல் போனேனே!

குந்தி :—அழாதே கர்ணா! அழாதே என் செல்வமே! விதிவசத்தால் பிழைத்து விட்டோம். இதோ நான் இங்குதான் இருக்கிறேன் வருந்தாதே.

கர்ண :—(விம்மி அழுது) அம்மா! என்ன துர்ப்பாக்கியம் செய்தேன்! உன்னையும் என் தம்பிமாரையும் எவ்வளவு துன்பத்துக்குள்ளாக்கினேன்!

குந்தி :—கர்ணா! போனதைப் பற்றி என்ன பேச்சு. இப்பொழுதுதான் உன் பிறப்பை அறிந்துவிட்டாயே. இனி என்ன கலக்கம்?

கர் :—அம்மா நான் பெரும்பாவி. என் பிறப்பை அறிந்தும் என்ன பயன்? பெற்றதாய்க்கும் உடன் பிறந்த தம்பிகளுக்கும் பகைவனுகவே......

குந்தி :—பகைவனுகவா? இன்னமுமா? இப்பொழுது தான் பாண்டவர்களின் மூத்த சகோதரன் ஆகிவிட்டாயே.

கர் :—வாஸ்தவம் அம்மா. ஆனல் துரியோதனனை எப்படிக் கை விடுவேன்? என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவன் அவனல்லவா?

குந்தி :—கர்ணு, என்ன இன்னும் இப்படிப் பேசுகிருய்? உன் சகோதரர்கள் துரியோதனனுல் அடைந்த கஷ்டத்தை அறிந்துமா? உன்னைப்பெற்ற நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்!

கர் :—ஆம் அம்மா. அதை நினைத்தால் தான் நெஞ்சம் பதைக்கிறது. ஆனலும், துரியோதனன் நட்பை நான் மறக்க முடியாதே......

குந்தி :—கர்ணு, அவனுடைய நட்பு உன் வாஞ்சையை விடவா பெரியது?

கர் :—அம்மா இதைக்கேள். துரியோதனன் மனைவியோடு ஒரு நாள் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தேன். திடீரென்று அவன் வந்து விட்டான். நான் பார்க்கவில்லை. அவள் பார்த்து எழுந்தாள். நடுவில் போகக்கூடாது என்று அவளுடைய முன்றனையைப் பிடித்து இழுத்தேன்.

குந்தி :—கர்ணு? என்ன காரியம் செய்தாய்!

கர் :—நான் என்ன செய்வேன்? அவன் இல்லையென்று நினைத்தேன். அவளுடைய மேகலாபரணத்திலிருந்த மணிகள் உதிர்ந்து சிதறி விட்டன.

குந்தி :—ஐயோ? துரியோதனன் கோபிஷ்டனுயிற்றே!

கர் :—கோபமா? உதிர்ந்த மாலைகளைப் பொறுக்கவோ கோக்கவோ என்று கேட்டான் அம்மா!

குந்தி :—நிஜமாகவா!

கர் :—எனக்கும் ஆச்சரியமாகத் தான் இருந்தது. திகைத்துப் போனேன்... இப்படிப்பட்ட நண்பனையா கை விடுவது!

குந்தி :—ஆனல் அ[illegible]ன் பக்கத்தை விட்டு வர முடியாது எ[illegible] சொல்லுகிருயா?

கர் :—நான் ஏன்ன [illegible]வேன் அம்மா? துரியோதனன் [illegible]ரு தீங்கும் செய்யவில்லையே. அதற்கு மாருக அவன் உயிரையே கொடுப்பானே.

குந்தி :—யுத்தத்தில் உன் சகோதரன் விஜயனைக் கொல்ல நேரிடுமே?

கர் :—யுத்த முடிவை இப்பொழுது எப்படிச் சொல்வது? விஜயனுல் நான் இறக்கலாம்.

குந்தி :—ஐயோ, எப்படிப் பார்த்தாலும் என் புதல்வர்களை இழக்க வேண்டுமே. கண்ணே கர்ணு, உன் முடிவை மாற்ற முடியாதா?

கர் :—அம்மா! உனக்குத் தெரியாததா? உன்னுடைய மூத்த புத்திரன் நட்புக்கு துரோகம் செய்தவன் என்பதைக் கேட்க உன் மனம் சகிக்குமா?

குந்தி :—நான் செய்த குற்றத்தின் பலன்! சரி, கர்ணு—எனக்கு இரண்டு வரம் வேண்டும். கொடுப்பாயா?

கர் :—அம்மா உன் அருளால் கேட்டவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்து வருகிறேன்—உனக்கு இல்லாததா—நான் என்ன கொடுக்க முடியும்?

குந்தி :—கர்ணு, நான் கேட்பது உன் உயிராகவே இருக்கும்......

கர் :—அம்மா, இது நீ கொடுத்த உயிர். உனக்கு அர்ப்பணம் செய்யாமல் யாருக்குக் கொடுப்பேன்?

குந் :—கர்ணு நீ துரியோதனனை விட்டுவர முடியாது. யுத்தத்தில் பாண்டவர்களைக் கொல்வதில்லையென்று வாக்குத் தத்தம் கொடுப்பாயா?

கர் :—அம்மா, அர்ஜுனனைத் தவிர வேறு யாரோடு நான் போரிடுவேன்? மற்ற நால்வரையும் தாக்கமாட்டேன். விஜயனை வீழ்த்த நான் தான் தகுதியுள்ளவன் என்று துரியோதனன் நினைக்கிருன். அவன் நம்பிக்கைக்கு துரோகம் செய்வதா?

குந் :—மற்ற நால்வரையும் கொல்லவில்லை என்று ஒப்புக்கொண்டாயே அது போதும்.

கர் :—அம்மா பெற்றதாயும் பிள்ளையும் சகோதரர்களைக் கொல்வதைப் பற்றியா பேசவேண்டும்? என்ன விபரீதம் என் விதிப்பயன்! ஆம், நீ கேட்டது மற்றொன்று.

குந் :—உன்னிடம் உள்ள நாகாஸ்திரத்தை அர்ஜுனன்மீது இரண்டாவது முறை பிரயோகிக்கக் கூடாது.

கர் :—அம்மா, என்னுடைய நாகாஸ்திரத்திற்கு விஜயன் தப்பிவிட்டால் திரும்பவும் பிரயோகிப்பேனு! இரண்டு தடவை ஒரே அஸ்திரத்தால் தாக்குவது வீரனுக்கு அழகல்ல. அதிலும் நீ பெற்றெடுத்த வீரன் லக்ஷணமாகாது. அதைப்பற்றி உனக்குக் கவலை வேண்டாம்.

குந் :—கர்ணு! நான் கேட்டதெல்லாம் கொடுத்து விட்டாய். ஆனல் யுத்தகளத்தில் என் குழந்தைகள் நீங்கள் ஆறு பேரும் போராடப்போவதை நினைக்க நெஞ்சம் பதறுகிறதே!

கர் :—அம்மா! இப்பொழுது அதை நினைத்துப் பயன் இல்லை. நடப்பது நடந்தேதீரும். இன்று உன்னைக்காணக் கொடுத்து வைத்தேனே. அந்த ஒரு சந்தோஷம் போதாதா! ஆனல், இந்த விஷயத்தை பஞ்சவர்களிடம் சொல்ல வேண்டாம்—யுத்தம் முடியும்வரை.

குந் :—ஏன்? நீ மூத்தவன் என்று கேட்டு அவர்கள் சந்தோஷிப்பார்களே.

கர் :—ஆம். உடனே தருமன் யுத்தத்தை நிறுத்திவிடுவார். என்னேடு போர் தொடுக்க ஒருவரும் முன்வர மாட்டார்கள். பாஞ்சாலி சபதம் வீணுகும்.

குந் :—ஆனல் யுத்தம் நடந்துதான் தீர வேண்டுமா?

கர் :—ஆம். நீ வருந்தவேண்டாம். எல்லாம் விதிப்படி நடக்கும்......அம்மா...... அம்மா!

குந் :—என்ன கண்ணே! என்னைத் தேற்ற வந்த நீயே கலங்குகிருயே.

கர் :—அம்மா—நான் கேட்கும் வரம் ஒன்று....

குந் :—என்ன செல்வமே? என்ன சொல்.

கர் :—யுத்தகளத்தில் நான் இறந்தவுடன்!

குந் :—நீ இறப்பதா.......

கர் :—ஆம், விஜயன் என்னைக் கொல்வது நிச்சயம். முதல்முறை அவன் நாகாஸ்திரத்திற்குத் தப்பிவிடுவான்....

குந் :—ஐயோ என்ன விபரீதம்!

கர் :—அம்மா என் உயிர்போனபின் நீ யுத்தகளத்தில் வந்து உலகமறிய என்னை உன் மடியில் எடுத்துக்கொள். நான் உன் புதல்வன் என்பதை எல்லோரும் அப்பொழுது அறியட்டும்... அதுவரை ஒருவருக்கும் தெரியவேண்டாம்....இந்த வேண்டுகோளைக் கொடுத்தருள் அம்மா! (கண்ணீர் விடுகிருன் அடக்கமுடியாத துக்கத்துடன்.)

குந் :—ஐயோ கர்ணு? பாவி நான் உன்னைப் பெற்றும் பெருத துர்ப்பாக்கியவதியாய் விட்டேனே....என் கண்ணே ...நான் எப்படியடா சகிப்பேன்.......?

---

கடிதம்

## தண்ணீர் வசதி

அன்பார்ந்த ஐயா,

கிராம வாசிகள் நலனை விருத்தி செய்வதற்கான யோசனைகளை எழுதி யனுப்பலாம் என்று தங்கள் பத்திரிகையில் கேட்டிருந்தீர்கள். முக்கியமாக, தண்ணீர் கஷ்டத்தைப்பற்றி நான் சில கூற விரும்புகிறேன். ஆற்றுப் பாய்ச்சலில்லாத இடங்களில் தண்ணீர் கஷ்டத்தினல் வயலுக்கு பாய்ச்சல் வசதி இல்லாமல் இருக்கிறது. மாகாண சர்க்கார் இது சம்பந்தமாக கவனம் செலுத்தவில்லை. பூமிக்குள் தண்ணீர் எவ்விடங்களில் இருக்கிறது அதை எப்படி உபயோகப் படுத்தலாம் என்பதை அவர்கள் ஆராயவில்லை. பூமிக்குள் இருக்கும் தண்ணீரை உபயோகித்துக் கொள்ள தனிப்பட்ட குடியானவர்களுக்கு சக்தியோ அல்லது வழியோ கிடையாது. கோயம்புத்தூர் போன்ற இடங்களில் குடியானவர்கள் முயற்சி செய்து பார்த்தார்கள். ஆனல் அந்த வேலை எவ்வளவு சிரமமானது என்பதை உணர்ந்தார்கள். எல்லா ஜில்லாக்களிலும் உள்ள வரண்ட பிரதேசங்களில் இது சம்பந்தமாக ஒரு தீர்மானமான ஆராய்ச்சி செய்ய வேண்டியதன் அவசியத்தை சர்க்கார் தொழில் இலாகா விடத்தும்—விவசாய இலாகா விடத்தும் தாங்கள் வற்புறுத்த [illegible]வண்டும்.

மதுரை.

தங்கள்,
நாராயணஸ்வாமி.




# அன்ன தானம்

(ஸ்ரீமதி சேது அம்மாள்)

பவானிபுரமென்பது சோழ நாட்டிலுள்ள ஒரு சிறிய ஊர். ஒரே ஒரு அக்ரஹாரம். தெருக்கோடியில் தேவி பவானியின் ஆலயமிருந்தது.

ஆலயத்தையடுத்த கூரை வீட்டில் பாகீரதியென்ற ஒரு பெண் வசித்துக் கொண்டிருந்தாள். அவள் விதவை. யாருமற்ற தனி ஜீவன். அவள் வசிக்கும் அந்த வீடு தகப்பனாருடையது—அந்த ஊரிலேயே கொஞ்ச நிலம்—அதுவும் அவள் தகப்பனார், ரொம்ப சிரமத்தோடு சேமித்துவைத்த முதலைக்கொண்டு மகளுடைய பிற்காலத் தேவைக்காக வாங்கி வைத்தது. அவர்தான் அந்த ஆலயத்தின் குருக்கள். பாகீரதிக்குக் கணவன் முகமே தெரியாது. அவ்வளவு சிறுவயதில் கலியாணமாகி, ஆறுமாதத்திற்குள் இறந்து போனான் அவளுடைய புருஷன். ஒரே மகளின் இந்த துர்ப்பாக்கியத்தில் மனமுடைந்தவளாக சீக்கிரமே தாயார் காலமாகி விட்டாள் சமீபத்தில் கிழத் தகப்பனார் காலம் சென்ற பின்புதான் தனியாளாக ஆகி விட்டாள். பாகீரதி. தந்தையின் புத்திமதியின்படி ஸத் விஷயத்தில் பொழுதைக் கழித்துக் கொண்டு ஊரின் தூஷணை பூஷணைகளில் ஈடுபடாமலிருந்தாள். யாரோடும் பழகுவது கிடையாது. ஹிந்து சமூக விதிப்படி கூந்தலைக்களைந்து கொள்ளவில்லை அவள். அந்தக் கிராம வாசிகள் இந்தக்காரணத்தைக் கொண்டு மனித ஹ்ருதய மற்று கட்டுப்பாடாக இருந்துகொண்டு அவளை அநேகமாக பகிஷ்கரித்துவிட்டது போல நடந்து கொண்டார்கள்.

பாகீரதி இதையெல்லாம் லட்சியம் செய்யவில்லை. தினம் தவறாமல் இரண்டு வேளை ஸ்நானம்; ஆலயம் சென்று தரிசனம்; படிப்பு; இப்படியாகக் காலம் கழித்துக் கொண்டு வந்தாள்.

அன்று நவராத்திரி ஆரம்பதினம். தன் வீட்டில் சீக்கிரம் பூஜை நிவேதனங்களை முடித்துக்கொண்டு கோவிலுக்குப் போனாள். தேவிக்கு ஸஹஸ்ரநாம அர்ச்சனை முடிந்து தீபாராதனை ஆவதற்கு நடுப்பகலாகிவிட்டது. அக்ரஹாரத்து ஆண், பெண், குழந்தைகள் யாவரும் கோவிலில் கூடியிருந்தார்கள். அப்போது ஒரு வயது முதிர்ந்த பிராம்மணர் தீபாராதனை சமயத்தில் வந்து தரிசனம் செய்து வணங்கினார். விபூதிப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. அந்தப் பிராம்மணர் ஒவ்வொருவரிடமாக தனக்குப் போஜனம் கிடைக்குமா என்று கேட்டுப் பார்த்தார். ஒருவராவது அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை. ஸன்னிதியில் அம்பிகையை தியானித்துக் கொண்டு நிற்கும் பாகீரதியின் காதில் விழுந்தது. திரும்பிப்பார்த்தாள். தள்ளாடிக்கொண்டு நின்ற அந்த அந்தணரைக் கண்டதும் அவள் மனம் இரங்கியது. அருகில் வந்து "ஸ்வாமி, வாருங்கள். சொற்ப ஆஹாரம் செய்து கொள்ளலாம்" என்று மெதுவாகச் சொன்னாள்.

"அம்மா. மகராஜியாக இரு. உனக்குத் தான்—உன்னிமித்தம் தான்—இந்த ஊருக்கு மழைபெய்கிறது. ஒருவர் பாக்கியில்லாமல் கேட்டுவிட்டேன்!" என்று அவளைப் பின் தொடர்ந்து அவள் வீட்டிற்கு வந்தார். உள்ளே சென்று செம்பில் ஜலம் கொணர்ந்து திண்ணையில் வைத்தாள். அவர் கால்களை அலம்பிக் கொண்டு வருவதற்குள் கூடத்தில் இலை போட்டு

தீர்த்தம் எடுத்துவைத்து விட்டு நின்று கொண்டிருந்தாள்.

அதிதி உள்ளே வந்து பார்த்தார். மண் வீடாயினும் சுத்தமாக இருந்தது. நடுக் கூடத்திருந்த அலமாரியில் தேவியின் படம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இன்ன மும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அலமாரியின்கிழ் பகவான் ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் படம் வைத்திருந்தது. பிராம்மணர் அம்பிகையின் முன் சென்று வணங்கிவிட்டு "ஈச்வரி, உன் கிருபை" என்று சற்று நின்று உற்றுப் பார்த்து விட்டு சாப்பிட உட்கார்ந்தார். இருந்த பதார்த்தத்தை அவருக்குப் பரிமாறி போஜனம் செய்வித்தாள்.

சாப்பாடு முடிந்ததும், பிராம்மணர் திண்ணையில் உட்கார்ந்து சிரமபரிகாரம் செய்துகொண்டே, பாகீரதியின் வரலாற்றை விசாரித்து, அவளுடைய பரிதாப மான சரித்திரத்தால் பாதிக்கப்பட்டு பெருமூச்சு விட்டார்.

"ஸ்வாமி, முதலில் அழைத்து விட்டேன். ஹிந்து ஆசாரத்தால் ஒரு வேளை அபராதியாகி விடுவேனோ என்று உடனே பயப்பட்டேன்" என்றாள்.

"குழந்தாய், நான் பகவான் பரமஹம்ஸரின் மடத்தைச் சேர்ந்தவன்தான். அவருடைய சிஷ்யருக்கு இந்த பேதங்களெல்லாம் கிடையாது! உன் ஜீவனத்திற்குப் போதுமானதாக ஏதாவது—"

"ஏதோ இருக்கிறது. இந்த வீடும், கொஞ்ச நிலமும், தேவியின் தரிசனமும், தகப்பனார் வாங்கிக் கொடுத்த பரம ஹம்ஸரின் உபதேசமும் இருக்கும் வரையில் கவலையே கிடையாது எனக்கு. இன்று ரொம்ப ஸுதினம். இந்த ஊரிலே இப்படிப்பட்ட உண்மையான பிராம்மணரைக் காண முடியாது! ஏதோ பூர்வ புண்ணிய வசத்தால் இன்று இந்தப் பதிதையின் குடிசை பாவனமாகிவிட்டது. இந்த ஜீவன் இப்படிப்பட்ட உத்கிருஷ்டமான மனுஷ்யர்களைப் பார்த்து ரொம்ப நாட்களாகி விட்டன. என் தகப்பனாரை மறுபடி இன்று கண்டதுபோல சந்தோஷிக்கிறேன். ஞானப்ராப்தியடைய ஆசிர்வாதம் செய்ய வேண்டும்."

"ஒரு குறைவுமில்லை யம்மா! ஈச்வரி கடாக்ஷிப்பாள். பசித்தவர்களுக்கு—ஜாதி பேதமின்றி—அன்னமிடும் இந்த புத்தியோடு தர்மாத்மகமாக மீதி காலத்தையும் கழித்து விடு. இது தான் பெரிய தர்மம். தானத்திற் சிறந்தது அன்னதானம். அதுவே பிராணதானம் என்பதை மறக்காதே. போய் வருகிறேனம்மா."

பாகீரதி அவர் மறையுமட்டும் அந்த திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிறகு உள்ளே சென்று தேவியின்முன் நின்று கைகளைக் கூப்பிக்கொண்டு இளகின குரலில், "அம்பிகே, தினமும் இப்படி ஒரு அதிதியின் ஆசிர்வாதமும் உன் பரிபூரண கிருபையும் நான் அடைய அருள் செய்! பகவன் பரமஹம்ஸ! உங்களுடைய அம்ருத உபதேசங்களை நான் மறந்து போகாத படியும் மாயை என்னைச் சூழ்ந்து விடாமலும் காப்பாற்றும்" என்று பிரார்த்தித்தாள்.

என்றுமில்லாதபடி அன்று விசேஷ அழகோடு அந்த அம்பிகை விளங்குவது போலிருந்தது அவளுக்கு.

# ஸோவியத்தில் பத்திரிகை நிலைமை

(ராமு)

நமது நாட்டில் மாகாணங்களும் சுதேச சமஸ்தானங்களும் இருப்பது போலவே ஸோவியத் ரஷ்யாவிற்குள் பல சிறு குடியரசுகள் அடங்கியிருக்கின்றன. அவை தமக்குத் தாமே சட்டங்கள் இயற்றிக் கொள்ளுகின்றன. பாஷைப் பிரச்னை இங்கிருப்பது போலவே அங்கும் உண்டு. ஆகையால் அங்கே பத்திரிகைகள் எப்படி இருக்கின்றன என்று அறிவது உபயோகமாக இருக்குமென்று இந்த விஷயத்தை எடுத்துக்கொண்டேன்.

பல சிறு அரசுகள் நிறைந்த அந்தப் பெரிய பிரதேசத்தின் விஸ்தாரமும் அதன் பல பகுதிகளிலிருக்கும் பாஷை வித்தியாசங்களும் இருந்தும்கூட, ரஷ்யாவில் பத்திரிகைகள் அபிவிருத்தி பெருமிதமாக இருப்பது மிகவும் ஆச்சரியம்; அது, ரஷ்யா பத்திரிகைகள் விஷயத்தில் எவ்வளவு ஊக்கம் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. பதினைந்து வருஷங்களுக்குள்ளாக பத்திரிகைகள் நிகரற்ற முறையில் விருத்தியடைந்திருக்கின்றன. ஸோவியத் அரசியல் திட்டத்தின் 125 வது ஷரத்தின்படி பிரஜைகளுக்கு பரிபூரணமாக பேச்சு சுதந்திரமும் பத்திரிகைகளுக்கு எழுத்து சுதந்திரமும் அளித்து சர்க்கார் இந்த அபிவிருத்தியை மேன்மேலும் வளர்த்து வருகிறார்கள்.

ஸோவியத்தில் சர்க்காரும் பொது ஸ்தாபனங்களும் கூட பத்திரிகைகளைப் பிரசுரிக்கின்றன. எல்லா அச்சுக்கூடங்களும் காகித ஆலைகளும் அவைகளுடையவை தான்.

ஜார் ஆண்ட காலத்தில் 1913-ல் ரஷ்யாவில் 859 பத்திரிகைகள்தான் இருந்தன; மொத்தம் 2,730,000 பேர்கள் படித்தார்கள். 1937-ல் 8520 பேப்பர்கள்; 36,197,000 பிரதிகள் செலவாயின! அதற்கும் இதற்கும் எங்கே? சுமார் 3390 மாகாண நகரங்கள் தாங்களே சொந்தமாகப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இதைத்தவிர ஆலைகளிலும் பண்ணைகளிலுமிருந்து 4605 பத்திரிகைகள் வெளியாகின்றன.

போக்குவரத்து, என்ஜினீரிங், இயந்திர உற்பத்தி, சுகாதாரம், உணவு, விவசாயம் கல்வி முதலிய இலாகாக்களிலிருந்து வெவ்வேறு பத்திரிகைகள் அச்சடிக்கப் படுகின்றன. இவை தவிர, இலக்கியம், கலை, விளையாட்டுகள் சிற்பம் — விஷயமான பத்திரிகைகளோ பல. 1880 சில்லரை சஞ்சிகைகளும் இருக்கின்றன; 2,50,0000 பிரதிகள் செலவாகின்றன!

ஸோவியத்தில் நடைமுறையிலிருக்கும் 69 பாஷைகளில் பத்திரிகைகள் பிரசுரமாகின்றன. குடியரசின் மக்கள் பேசும் பாஷையில் பிரசுரமாகும் பத்திரிகைகளைத் தவிர அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் சிறுபான்மையோரின் பாஷைகளிலும் கூடப் பத்திரிகைகள் உண்டு.

பெரிய தொழில் ஸ்தாபனம் ஒவ்வொன்றும் ஒரு பத்திரிகை நடத்துகிறது. தொழிலாளர்கள் இடையேயிருந்தே ஆசிரியர்களைப் பொறுக்குகிறார்கள். அந்தப் பத்திரிகைகள் வாரத்திற்கொருமுறையாவது பத்து நாட்களுக்கு ஒருதடவையாவது வெளிவருகின்றன. தொழில் ஸ்தாபனமும் வர்த்தக சங்கமும் அதன் செலவை ஏற்றுக்கொள்ளுகின்றன.

அச்சடித்த பத்திரிகை இல்லாத இடங்களில் டைப்செய்த 'சுவரொட்டி'கள் இருக்கின்றன. ஆலைகள் பண்ணைகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் விஷயங்களுக்காக வெளியுதவியை எதிர்பார்ப்பதே இல்லை. தொழிலாளர்களே எழுதுகிறார்கள்.

பிரபல தினசரியான 'பிரவ்டா' முதல் எல்லாப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் தங்களுக்கு வரும் கடிதங்களை வெகு ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். ஒரு பிரஜையிடமிருந்து வரும் கடிதத்தை ஒரு பத்திரிகாசிரியன் அலட்சியம் செய்தால், அவன் நம்பிக்கைமோசம் செய்தவனாகக்

(125-ம் பக்கம் பார்க்க)

# ரேடியோவும் சினிமாவும்

"சிரேஷ்டன்"

ஜனங்களுக்குக் கல்வி புகட்ட ரேடியோவும் சினிமாவும் மேல் நாட்டில் சிறந்த சாதனங்களாக இருக்கின்றன. நாகரீகமடைந்த ஒவ்வொரு தேசத்திலும் இந்த விஷயத்தில் மிகுந்த சிரத்தை காண்பித்திருக்கிறார்கள். ஏன் இவ்வளவு சிரத்தை காண்பிக்கிறார்களென்றால் இவை இரண்டைப்போல மக்கள் கவனத்தைக் கவரும் போதனை முறை வேறுகிடையாது என்பதால்தான்.

படித்தோரும் சரி, பாமரரும் சரி; ரேடியோ சினிமா இவற்றை விரும்புகிறார்கள். புஸ்தகத்தைப்படித்து விஷயத்தைத் தெரிந்து கொள்வது கொஞ்சம் சிரமமான காரியம். ஆனால் சினிமா பார்க்கப்போவதென்பது யாருக்குத்தான் பிடிக்காது? அந்த சினிமா மூலம் இன்ஜெக்ஷன் செய்வதுபோல சில கருத்துக்களை ஜனங்கள் மனதில் புகட்டிவிடலாம். ஜெர்மனியில் நாஜிக் கொள்கைகளை ஜனங்கள் மனதில் இப்படித்தான் புகட்டுகிறார்கள். ரஷ்யாவில் பொதுவுடமைப் பிரசாரம் சினிமா மூலம் திவ்யமாக நடக்கிறது. இதாலியிலும் இப்படியே.

பல தேசங்களிலும் சர்க்காரார்கள் தங்கள் காரியங்களை முடித்துக் கொள்ள சினிமாவை உபயோகிப்பது ஆச்சர்யமல்ல. அவர்களுக்குப் பிடிக்காத கொள்கைகளுள்ள சினிமாப் படங்களைத் தடுத்துவிடுவதிலும் ஆச்சரியம் கிடையாது. ஏனென்றால் ஒரு தேசம் மற்றொரு தேசத்தை இழிவுபடுத்த சினிமா முறையைக் கையாளுகிறது. உதாரணமாக, இந்தியாவை இழிவுபடுத்த சமீபத்தில் சில அமெரிக்க, ஆங்கிலக் கம்பெனிகள் முயன்றதல்லவா? மக்கள் மனதில் வேடிக்கையைப்போல சில அபிப்பிராயங்களைப் புகுத்துவதில்தான் சினிமாவின் சக்தி அடங்கியிருக்கிறது. பிறருக்கு இடைஞ்சல் உண்டாகாமல், பிறர் மனதைப் புண் படுத்தாமல், ஜனங்கள் மனதில் ஒழுங்கு, தேசபக்தி, தியாகம், வீரம், அன்பு முதலிய குணங்களைப்புகட்ட சினிமாவுக்குச் சக்தியுண்டு. ஆயிரம் புத்தகங்களாலும் அதற்கு மேற்பட்ட பிரசங்கங்களாலும் உண்டாக்கமுடியாத ஓர் சமூகப் புரட்சியை சினிமா உண்டாக்க முடியும். 'புத்தகங்களைப்படியுங்கள்' 'வீட்டைச்சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள்,' 'இந்த விதமாக நிலத்தை உழுது சாகுபடி செய்யுங்கள்,' இப்படி யெல்லாம் போதிக்கக்கூடிய கல்விப் படங்களைத் தயார் செய்து அறிவு புகட்டலாம். சினிமா ஓர் நல்ல ஆயுதமாக இருப்பதால்தான் அதைக் கெட்ட காரியத்துக்கு உபயோகிக்கக் கூடாது.

பாமரமக்களின் அறிவு வளர்ச்சியில் அக்கரையுள்ள சர்க்கார் இதுமாதிரிக் கல்விப் படங்களைத் தயார் செய்வதில் கவனம் செலுத்தவேண்டும். தாங்கள் அம்மாதிரி செய்ய முடியாவிட்டால் தனிப்பட்ட சினிமாக் கம்பெனிகளுக்கு ஊக்கமளித்து படங்களைத் தயார் செய்யச் செய்யலாம். இந்த சினிமா இலாகாவை விளம்பரமந்திரி கையில் ஒப்புவித்துவிடலாம்.

விவசாய இலாகா, தொழில் இலாகா, சுகாதார இலாகா இம்மாதிரி ஒவ்வொரு இலாகாவும் அதற்கு ஏற்ற முறையில் படங்களைத் தயார் செய்து சிப்பந்திகள் வசம் ஒப்புவித்து கிராமங்களிலும் நகரங்களிலும் பொது ஸ்தலங்களிலும் காண்பிக்கவேண்டும்.

சாஸ்திரீய முறையில் விவசாயத்தை நடத்த வேண்டியதனவசியத்தைப் படங்கள் மூலமாக விவசாய இலாகா உணர்த்தலாம். எந்தெந்த நாடுகளில் எந்தவிதமாக விவசாயம் நடக்கிறது; எப்படி தண்ணீர் பாய்ச்சுகிறார்கள்; உழுகிறார்கள்; எப்படி இயந்திர சாதனங்களை உபயோகிக்கலாம்; இப்படியெல்லாம் படங்கள் எடுத்துக்காட்டலாம். அதுமாதிரியே சுகாதார இலாகா 'வியாதியைத் தடை செய்யும் பிரசாரத்தைக் கையாளலாம். குப்பை

களங்களை வாசலில் கொட்டிவைத்தால் வியாதிவரும் என்பதை பட ரூபமாகக் காண்பித்தால் எவ்வளவு சீக்கிரமாக கிராம வாசிகள் மனதில் படும்?

இந்த மாதிரிக் கல்விப்படங்களை கிராமந் தோறும் காண்பிக்கவேண்டும். அப்போதுதான் பாமரர்களிடம் புரட்சி ஏற்படும். இவ்வளவு லட்சம் ரூபாய்கள் ரேடியோவில் செலவிடும் சர்க்கார் மாகாண சர்க்காருடன் இந்த விஷயத்தில் கலந்து ஆலோசித்து சிக்கன முறையில் ஓர் திட்டத்தை வகுக்கலாம். ஸ்தல ஸ்தாபனங்களும் கிராம சபைகளும் தியேட்டர்காரர்களும் சர்க்காருக்கு இந்த விஷயத்தில் உதவி செய்வார்கள். இலாகாக்களில் இருக்கும் நிபுணர்கள் இந்த ஸ்டுடியோ இலாகாவுடன் ஒத்துழைப்பார்கள்.

ரேடியோவைக் காட்டிலும் சினிமா முக்கியமானது. பாமரன் செவிக்கு ஆனந்த மளிப்பதல்லாமல் சினிமா தத்ரூபமாக விஷயங்களைக் கண்முன் உணர்த்துகிறது. ரேடியோ பிரசாரம் மிகவும் நல்லதுதான்; ஆனால் சினிமா பிரசாரத்தின் முன் ரேடியோ பிரசாரம் எங்கே? அதுவும் நமது விவசாய ஏழை இந்தியாவுக்கு மலிவான ரேடியோ கிடைக்கும் வரை சினிமாக் கல்வி முறைதான் ஏற்றது. மேலும், நமக்கு ரேடியோ மனப்பான்மையைவிட சினிமா மனப்பான்மை ரத்தத்தில் வேரூன்றி யிருக்கிறது. எனவே சினிமாக் கல்விமுறைத் திட்டமொன்றை மாகாண சர்க்கார்கள் மத்ய சர்க்காருடன் கலந்து தயாரிக்கவேண்டியது மிக்க அவசியம்.

---

(123-ம பக்கத் தொடர்ச்சி)

கருதப்படுகிறான். எனவே ஆசிரியர்கள் அப்பேர்ப்பட்டவர்களுடன் உடனே கலந்தாலோசித்து அவர்கள் ஒத்துழைப்பைப் பெறுகிறார்கள்.

ஒரு அரசியல்வாதியையோ அல்லது தொழிலாளியையோ பற்றி அந்தரங்க வாழ்க்கை விஷயமாக ஒன்றும் பத்திரிகைகளில் தென்படாது; சமூக வம்பளப்பும் விஸ்தாரமாக இருக்காது. எனவே பத்திரிகைகளில் 'ருசிகரமான' கிளர்ச்சியூட்டும் செய்திகளே அநேகமாக இருக்கமாட்டா. எனவே பத்திரிகை முறையில் ஒரு உயர்ந்த ரகமான நியதி ஏற்படுகிறது. 'சாக்கடை' பாஷையும் விஷயமும் இல்லாமல் பரிசுத்தமாகவே இருக்கும். அந்த பத்திரிகைகள் நாளுக்குநாள் விஸ்தாரமடைவதிலிருந்து பொது மக்கள் அரசியல் சமூக விஷயங்களில் எடுத்துக் கொள்ளும் சிரத்தை எவ்வளவு என்பது வியக்தமாகிறது.

இதன் மூலமாக புத்தக வியாபாரமும் பிரபலமாகிவிட்டது. ஸோவியத் குடியரசுகளும் தங்கள் தங்கள் புத்தகப் பிரசுராலயங்களைக் கொண்டிருக்கின்றன. அவை மூலம் அந்தந்த பாஷைகளில் லட்சக்கணக்கான புத்தகங்கள் பிரசுரமாகின்றன.

(இந்தக் கட்டுரையில் காணப்படும் புள்ளி விபரங்கள் ஸோவியத் அச்சுத் தொழிலாளர்கள் சங்க பிரதம கமிட்டியின் தலைவர் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.)

---

# கல்வியின் லக்ஷியம்*

சமீப காலத்தில் மிகவும் முக்கியத்துவமடைந்த பிரச்னைகளில் ஒன்று என்னவென்றால், எவ்வளவுதூரம் சர்க்கார் படிப்பை நிர்வாகம் செய்யலாம் என்பதுதான். நிர்வாகம் என்பதற்கு அர்த்தம் கணக்கைச் சரிவர பார்த்துக்கொள்ளச் செய்வது, பள்ளிக்கூடம் சரியாக நடைபெறும்படி செய்வது என்பதானால் அதில் அபிப்பிராய பேதமிராது. சர்க்கார் பொது ஜனங்களின் பிரதிநிதி. ஆகையால் பொதுப் பணம் எங்கெந்த ஸ்தாபனங்களுச் செல்வாகிறதோ அவை சரிவர நடைபெறுகின்றனவா என்று கவனிக்க வேண்டும். ஆகையால், உதவிபெறும் ஸ்கூலாயிருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, இந்த அளவுக்கு சர்க்கார் மேற்பார்வையை ஒப்புக்கொள்ளவேண்டும். சர்க்கார் அளித்திருக்கும் அமைதியான நிலையினால்தானே ஸ்தாபனங்கள் நடக்கின்றன? ஆகையால் சர்க்கார் மேற்பார்வையை ஒப்புக்கொள்ளத் தயங்கக்கூடாது. ஆனால், மேற்பார்வை என்பதற்கு அர்த்தம் இன்று வேறு.

இன்றைக்கு ஜெர்மனியில் என்ன நடக்கிறதென்று பாருங்கள். எந்த வயதில் படிப்பு ஆரம்பமாக வேண்டுமென்றும் எவ்வளவு பேர் படிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிற தல்லாமல் யார் யார் உபாத்தியாயர்களாக இருக்கவேண்டும், யார் யார் படிப்புச் சொல்லிக் கொள்ளவேண்டும், எப்படிப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சர்க்கார் தீர்மானிக்கிறது. உபாத்தியாயர்களும் மாணவர்களும் யூதர்களாக இருக்கக்கூடாது; தன்னுடைய கொள்ளுத்தாத்தா பாட்டி முதல் எல்லோரும் ஆரியர்கள்தான் என்பதை ஒருவன் ருஜூப்பிக்கவேண்டும்!

நம் தேசத்தில் படிப்பு எப்படிச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது? சரித்திரத்தில் ஹிந்துவும் முஸ்லீமும் வேறுவேறு தேசத்தினர் என்பதையும், நாம் எப்போதும் அடிமைகள்தான் என்பதையும், பிரிட்டிஷார் வருவதற்குமுன் நாம் நிம்மதியைக் கண்டதேயில்லை என்றும் பொருள்படும்படி சரித்திரம் போதனை செய்கிறது. சர்க்கார் கட்டுப்பாடான படிப்புமுறையைக் கையாண்டால் ஆச்சர்யமான பலன் உண்டாகும். அது ஒரு குறிப்பிட்ட மனோநிலை அடைய மனிதனைத் தயார் செய்கிறது. சர்வாதிகார நாடுகளில் இந்த முறையைத்தான் வெற்றியுடன் கையாளுகிறார்கள். இதனால் தேசீயகர்வமும் அகம்பாவமும் உண்டாகின்றன. சண்டையும் ஒப்பந்தத்தை மீறும் மனப்பான்மையும் உண்டாகின்றன. ஆனால் இம்மாதிரி போய்க்கொண்டே இருப்பதா? நாகரீகமடைந்த மனித சமூகத்துக்குப் பொதுவான ஓர் மதிப்பு நிர்ணயமே இல்லாமல் போய்விடுமா? உண்மையான யோக்கியதை, நற்குணம் முதலிய வார்த்தைகளுக்கு ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு அர்த்தம் உண்டோ? அப்படியானால் தேசங்களுக்குள் வியாபார நாகரீக சம்பந்தங்கள் எப்படி நடைபெறும்?

இந்தியா உலகத்துடன் கூடிய ஒரு உருப்பு. நாடகத்தில் நாம் வேடிக்கை பார்ப்பவர்களல்ல. நாம் ஆக்டர்கள். என்றைக்கோ ஒருநாள் சண்டை மூளப்போகிறது. அப்போது ஜனநாயகத்திற்காக சண்டைபோடும்படி நம்மைக் கேட்பார்கள். அப்போது நாம் என்ன செய்ய வேண்டுமென்பதைப்பற்றி ராஜீய ஸ்தாபனங்கள் தீர்மானிக்கும்.

இதெல்லாம் சாதாரணமான தர்க்கத்துக்குரிய விஷயமல்ல; முக்கியமான விஷயங்கள். மனிதன் மற்றொரு மனிதனைச் சுரண்டுவதைத் தடுக்கக்கூடியதும், வாழ்க்கையை இனியதாக்குவதுமான ஓர் புதிய சமூகத்தை அமைக்க முயலவேண்டும். நமது சமூகத்தின் குறை யென்னவென்றால் அதற்கு லக்ஷியமில்லாமல் இருப்பது. நமது கல்வியும் லக்ஷியமில்லாமல் இருக்கக் கூடாது.

* ஸ்வாமி ஸம்பூர்ணானந்த் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

# ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்

கோயமுத்தூர் ஜில்லா ஸ்ரீ ராம கிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் 1938ம் வருஷத்திய அறிக்கை வரப்பெற்றோம். எட்டு வருஷங்களுக்குமுன் ஆரம்பிக்கப் பட்ட இந்த வித்தியாலயம் எத்தகைய ஆச் சரியமான முன்னேற்றத்தை அடைந்திருக் கிறதென்பதை அறிகிறோம்.

தமிழ் நாட்டில் குருகுல முறையை மீண்டும் கொண்டுவந்து புத்துயிர் அளிக்க பல தேச பக்தர்கள் சமீப காலத்தில் முயன்றார்கள். சிற்சில இடங்களில் அந்த முயற்சி தோற்றுப்போயிற்று. அந்த சமயங்களிலெல்லாம் தமிழர்கள் மிகவும் அபாக்கியசாலிகள் என்று வருந்தும்படி யிருந்தது. ஆனால் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்போன்ற ஒன்றிரண்டு வெற்றி கள் நமக்கு தைர்யத்தைக் கொடுத்து "முயற்சியை விட்டுவிட வேண்டாம்" என்று தேறுதல் கூறுகின்றன.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் 97 மாணவர்கள் இருக்கிறார்கள். இல்ல முறை (House System)ப்படி மாணவர் களை வகுப்புக்குத் தகுந்தாற்போலப் பிரித்து தனித்தனி ஆசிரியர்கள் மேற் பார்வையில் அவர்கள் விடப்பட்டிருக்கிறார் கள். மாணவர்கள் இயல்பை அறிந்து அவர்களுக்கேற்ற பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களே தங்கள் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுத்து எல்லா அலுவல் களையும் கவனிக்கிறார்களென்பது குறிப் பிடத்தக்கது.

சென்ற வருஷம் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பு ஆரம்பமாயிற்று. மாணவர்கள் கல்வி அபிவிருத்திக்கு விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. மாணவர்களுக்கு எழுத்துத் திறமை உண்டாக்க "பால பாரதி" என்ற பத்திரிகை வேறு நடத்து கிறார்கள். சித்திரம், கவிதை எல்லாம் மாணவர்களால் எழுதப்பட்டு பத்திரிகை யில் வெளிவருகின்றன. சங்கீதம், நாடகம் இவற்றில்கூட மாணவர்கள் பயிற்சி பெறு கின்றனர்.


எல்லாவற்றிற்கும் மேலாக, மாணவர் களுக்குக் கைத்தொழில் பயிற்சி அளிக் கப்படுகிறது. தச்சுவேலை, பஞ்சு உடைத் தல், நூற்றல், தையல் இவை சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. வாரத்திற்கு 4 மணி நேரம் தொழிற் கல்வி.

எப்போதும் படித்துக் கொண்டோ 'லொட்' 'லொட்' என்று தட்டிக் கொண்டு தொழிற்சாலை இயந்திரமாகவோ போகாதபடி மாணவர்களுக்கு விளையாட வும் வசதி இருக்கிறது. குஸ்தி, குத்துச் சண்டை இவைகள்கூட மாணவர்களுக் குத் தெரியும். ஆகையால் இவர்களைப் பற்றி எழுதும்போது ஜாக்கிரதையாக எழுதவேண்டுமல்லவா?

முக்கியமாக, இப்பள்ளிக்கூட மாணவர் கள் கிராம சேவை செய்வது பாராட்டுதற் குரியதாகும். மாணவர்களும் ஊழியர் களும் அக்கம் பக்கத்திலுள்ள கிராமங் களுக்குச் சென்று இரவுப் பள்ளிக்கூடங் கள் நடத்தி பாமரரிடை ஞான விளக்கு ஏற்றுகிறார்கள்.

இந்தப் பள்ளிக்கூடத்துக்கு 70,000 ரூபாய் ஆஸ்தி இருக்கிறது. ஆகையால் மிகவும் நல்ல திட்டங்களைக் கொண்டுவர போதிய அஸ்திவாரத்தைப் பெற்றிருக் கிறார்கள். பொதுக் கணக்கு அறிக்கை யைப் பார்த்தால் எவ்வளவு சீராக நிர்வா கம் நடந்துவருகிறது என்பதை அறிய லாம்.

ஆனால் இந்தப் பள்ளிக்கூடம் இவ்வளவு அழகாக நடைபெறுவது ஆச்சரியமில்லை. ஏனென்றால் ஸ்ரீ டி. எஸ். அவனாசிலிங்கம் செட்டியார் இதன் காரியதரிசி. தமிழ் நாட்டில் இரண்டு அரசியல் காளைகளில் ஸ்ரீ அவினாசிலிங்கம் ஒருவர் என்று எழுதியிருந்தோம். அத்தகைய ஆற்ற லும் வேகமும் உள்ள மனிதர் தலைமையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் மேலும் வளர்ச்சிபெற்று இந்தியாவின் ஈட்டளை விளங்குமென்பதில் சந்தேக மில்லை.



'மாலபில்லா'வில் ஒரு காட்சி.